# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

2077 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

### பதவிகள் - வெற்றிடம்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளுக்கும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் மேற்படி வர்த்தமானியைப் பார்க்கவும்**

மறுசீமைப்பு

**கல்வி அமைச்சு**

நாட்டின் தேசிய பாடசாலைகளில் காணப்படும் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக பட்டதாரிகளை தொழில் வாய்ப்புக்களில் ஈடுபடுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையின் 2-II ஆம் தரத்திற்குச் சேர்த்துக்கொள்ளல் - 2018

2018.05.25 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட 2073 ஆம் இலக்க வர்த்தமானியின் 5-681/2 ஆம் அறிவித்தலில் விண்ணப்பம் கோரும் இறுதித் திகதி 2018.07.16 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சுனில் ஹெட்டிஆரச்சி,
செயலாளர்,
கல்வி அமைச்சு,

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பெலவத்த,
பத்தரமுல்ல,
2018, யூன் 19.

6-1149/1

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

மறுசீமைப்பு

**கல்வி அமைச்சு**

நாட்டின் தேசிய பாடசாலைகளில் காணப்படும் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக பட்டதாரிகளை தொழில் வாய்ப்புக்களில் ஈடுபடுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையின் 3-I (அ) தரத்திற்குச் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை - 2018

2018.05.25 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட 2073 ஆம் இலக்க வர்த்தமானியின் 5-681/1 ஆம் அறிவித்தலில் விண்ணப்பம் கோரும் இறுதித் திகதி 2018.07.16 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சுனில் ஹெட்டிஆரச்சி,
செயலாளர்,
கல்வி அமைச்சு,

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பெலவத்த,
பத்தரமுல்ல,
2018, யூன் 19.

6-1149/2

---

**அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இன் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2012 (II) (2018)**

1.0 அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இன் அலுவலர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு அமைவான ஒரு வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை 2018 செத்தெம்பர் மாதம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2.0 இப் பரீட்சை உரியதாகும் விண்ணப்பதாரர்களைப் பற்றி 2013.12.11 ஆந் திகதிய 1840/34 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் வெறியிடப்பட்டுள்ள அரச முகாமை உதவியாளர் சேவைப் பிரமாணத்தின் பந்தி 08 இனது ஏற்பாடுகள் பந்தி 15 இனது இடைக்கால ஏற்பாடுகள் மற்றும் இணைப்பு 04 இல் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

3.0 முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட தரம் III இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையினைப் பூர்த்திசெய்திராத ஆனால் (1) அலுவலக முறைமைகள், (2) கணக்கீட்டு முறைமைகள் ,(3) கணினிப் பரீட்சை என பெயர்குறிப்பிடப்படும் இப் பரீட்சையின் ஒரு பாடத்தை அல்லது சிலவற்றையோ சித்தியெய்தி அல்லது விலக்களிப்புப் பெற்றுள்ள அலுவலர்கள் பாடத்துக்குப் பாட அடிப்படையில் இச் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட தரம் III இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் உரிய பாடங்களிலிருந்து விலக்களிப்புப் பெறல் வேண்டும். ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று வருடங்களுக்குள் இப்பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

4.0 அரச முகாமை உதவியாளர் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான இப் பரீட்சையானது கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அனுராதபுரம், பதுளை, இரத்தினபுரி, மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். உரிய நகரங்களும் நகர இலக்கங்களும் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. விண்ணப்பிக்கும் நகரம் மற்றும் நகரங்கள் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

**அட்டவணை**

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 05 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| முல்லைத்தீவு | 12 |
| திருகோணமலை | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| குருநாகல் | 18 |
| அநுராதபுரம் | 19 |
| பதுளை | 21 |
| இரத்தினபுரி | 24 |
| கிளிநொச்சி | 25 |

மேற்படி ஏதேனும் நிலையங்களுக்காக போதிய அளவு விண்ணப்பதாரிகள் இல்லாவிட்டால் அந் நிலையம் இரத்துச் செய்யப்படுமென்பதுடன் அதற்கு அண்மித்துள்ள நிலையத்திற்கு பரீட்சார்த்திகள் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவர்.


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2018, யூலை மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, யூன் மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்காணி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

5.0 (i) இப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகள் என்பனவற்றுக்கு விண்ணப்பதாரிகள் அமைந்தொழுக வேண்டும்.

(ii) விண்ணப்பதாரிகளுக்காக விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகள் வர்த்தமானப் பத்திரிகையில் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளன. இவ் ஒழுங்கு விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாவர்.

6.0 விண்ணப்பம் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமைதல் வேண்டும். விண்ணப்பதாரிகள் அம் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தமது விண்ணப்பங்களை தயாரித்துக்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை விண்ணப்பதாரிகள் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக 2018, யூலை 23 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
த. பெ. இல. 1503,
கொழும்பு

எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை இட்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது இருந்த விண்ணப்பதாரியின் பதவி, சேவை நிலையம் மற்றும் பரீட்சை தொடர்பான அனைத்து விடயங்களும் கவனத்தில் எடுக்கப்படுவதுடன் பரீட்சை விண்ணப்பம் அனுப்பியதன் பின்னர் நிகழும் மாற்றங்கள் எவையும் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.

**குறிப்பு** - இவ் அறிவித்தலுக்கு சமாந்தரமாக மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் விண்ணப்பதாரிகளுக்கான சட்டதிட்டங்கள் பொறுத்தமான மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலமும் வேறு நிறுவனங்களின் விண்ணப்பதாரிகளுக்கான சட்டதிட்டங்கள் குறித்த நிறுவனத்தின் மூலமும் வெளியிடப்படும்.

ஒவ்வொரு மாகாண அரச சேவை மற்றும் ஏனைய நிறுவனங்களிலுள்ள அலுவலர்களின் விண்ணப்பங்களை வசதியாக இனங்காண்பதற்கென பின்வரும் குறியீட்டு இலக்கங்கள் பாவிக்கப்பட வேண்டும். உரிய சேவை அல்லது நிறுவனத்தினைக் குறிப்பிடும்போது விண்ணப்பத் தலைப்பில் இந்த இலக்கங்கள் பதியப்படல் வேண்டும். இணைந்த சேவையின் அலுவலர்களுக்கான குறியீட்டு இலக்கம் 10 ஆகும். அவ் இலக்கத்தை விண்ணப்பப்படிவத்தின் வலதுபக்க மேல்மூலையில் உங்கள் சேவை மற்றும் சேவை நிலையத்தில் குறிப்பிட வேண்டும்.

7.0 **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம் :**

விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆளடையாள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். :-

I. ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை;

II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

மேற் குறிப்பிட்டுள்ள ஓர் ஆவணத்தை சமர்ப்பிக்க தவறும் பரீட்சார்த்தி ஒருவரின் பரீட்சார்த்த உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம்.

8.0 **விண்ணப்பப்பத்திரங்கள் :-**

விண்ணப்பங்கள் - பந்தி இலக்கங்கள் 1.0 தொடக்கம் 3.0 வரை முதற் பக்கத்திலும் ஏனையவை அடுத்த பக்கத்திலும் தோன்றும் விதத்தில் A4 அளவிலான ஒரு தாளில் தயாரித்தல் வேண்டும். விண்ணப்பமானது தட்டச்சு செய்யப்பட முடியும். ஆனால் அதை விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்திலேயே சரியாகவும் தெளிவாகவும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவமானது பின்னிணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தினையே ஒத்ததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரம் அனுப்பவேண்டும். விண்ணப்பப்படிவத்தின் புகைப்படப் பிரதி அனுப்பலாகாது. மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமையாத மற்றும் முறையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப் படிவங்கள் இரண்டிலும் மாதிரி விண்ணப்பப்படிவத்தில் காணப்படும் பரீட்சை தலைப்பினை அதேபோல ஆங்கில மொழியிலும் தயவு செய்து குறிப்பிடவும். தன்னால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவமானது பரீட்சை அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாகவும் சகல தகவல்களும் உள்ளடக்கப்பட்டதாகவும் விண்ணப்பம் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா எனவும் குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதன் விபரங்கள் விண்ணப்பத்தில் உள்ளடக்கப்பட்டு பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா எனவும் விண்ணப்பதாரியினால் பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும். மேலும், விண்ணப்பதாரி பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியினை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுடையதாகும்.

தவறான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை - விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்யும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப் பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் என தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின்போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி தகைமையை இரத்துச்செய்ய முடியும்.

முதல் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டியதில்லை. எனினும், அடுத்தடுத்த அமர்வுகளிற்கு ஒரே தடவையில் எல்லா விடயங்களுக்கும் தோற்றுவதானால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட விடயங்களுக்கு தோற்றுவதானால் ரூபா 500 உம் ஒரு விடயத்துக்கு மட்டும் தோற்றுவதானால் 250 உம் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 க்கு வரவு வைக்கப்படுவதற்கென தீவின் ஏதேனுமோர் தபாலகம்/உப தபாலகத்தில் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய கூட்டில் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் படப்பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பிரயோசனப்படலாம். இப் பரீட்சைக் கட்டணத்திற்கு மேலதிகமாக எதுவித கட்டணங்களும் அறவிடப்பட மாட்டாது என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன். எக்காரணம் கொண்டும் இக் கட்டணம் திருப்பியளிக்கப்பட மாட்டாது. இப் பரீட்சைக்கு செலுத்திய கட்டணம் வேறொரு பரீட்சைக்கு மாற்றிக்கொள்ள முடியாது. மேலும் பரீட்சைக்கட்டணத்துக்காக முத்திரை அல்லது காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9.0 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் அநுமானத்திற்கு ஏற்ப அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் குறித்த பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்திய விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை வழங்குவார். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் பத்திரிகைகளில் அறிவிப்பொன்று வெளியிடப்படும். அத்தகைய அறிவிப்பு வெளியாகி 02 நாட்கள் அல்லது 03 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு பரீட்சை திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளைக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பரீட்சைகள் திணைக்களத்திற்கு கோரிக்கையிடும் வேளையில் பின்வருபவனவற்றை அதாவது தங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக்கட்டணம் செலுத்தியிருப்பின் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி, முழுப்பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை இலக்கம், விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில் அனுப்பியபோது பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு ஆகியவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப்பிரதிகள் என்பனவற்றை தங்களிடம் வைத்துக்கொள்ளல் பயனுடையதாகும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகளாயின், அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய ஒரு தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தைக் குறிப்பிட்டு ஒரு கோரிக்கைக் கடிதத்தினை தொலைநகல் ஊடாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் ஏதாவதொரு தகவலை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக தங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக்கட்டணம் செலுத்தியிருப்பின் அப் பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பத்தை பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டையும் கைவசம் வைத்திருத்தல் பிரயோசனப் படலாம்.

10.0 விண்ணப்பதாரி ஒருவருக்கு அனுமதி அட்டைகள் வழங்குவது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் பதவியொன்றைப் பெற்றுக்கொள்வதற்கும் சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளதாக கருதப்படமாட்டாது. பரீட்சைக்கு தோற்றுகின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் ஏற்கனவே அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளில் தங்களுடைய கையொப்பங்களை இட்டு அதனை பரீட்சையின் முதல் நாளிலேயே பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதி அட்டைகள் இல்லாத விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட அலுவலர்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு திணைக்களத் தலைவர் கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாண செலவுகள் செலுத்தப்பட மாட்டாது.

10.1 விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை நிறுவனத் தலைவரிடம் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரின் மூலம் சான்றுப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

11.0 சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலம் இப் பரீட்சை நடாத்தப்படுவதுடன் தொடர்புடைய சேவையில் சேர்வதற்காக பரீட்சைக்கு தோற்றிய மொழியிலோ அல்லது அரச கரும மொழியொன்றிலோ அலுவலர்கள் இப் பரீட்சைக்கு தோற்றலாம். போட்டிப் பரீட்சையின்றி சேவைக்குச் சேர்ந்த அலுவலர்கள் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றில் இப் பரீட்சைக்குத் தோற்றலாம். பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

12.0 அலுவலர்கள் தாம் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகவும் வேறுபட்ட தடவைகளிலும் தோற்றலாம். எனினும், சித்தி பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கு உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்த பட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதத்தினை பெற்றுக் கொள்ள வேண்டும்.

13.0 பரீட்சை பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்படுவதுடன் பரீட்சைப் பெறுபேறுகள் அரசாங்க நிருவாக முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

14.0 **பரீட்சைத் திட்டம்** - விண்ணப்பதாரிகள் பின்வரும் பாடங்கள் உள்ளடங்கிய ஓர் எழுத்துப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

| | பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | நேரம் |
|---|---|---|---|---|
| 1. | அலுவலக முறைகள் | 01 | 100 | 2 மணித்தியாலம் |
| 2. | கணக்கீட்டு முறைகள் | 02 | 100 | 2 மணித்தியாலம் |
| 3. | கணினிப் பரீட்சை | 03 | 100 | 1 1/2 மணித்தியாலம் |

14.1 **அலுவலக முறைகள்** : (பாட இலக்கம் - 01)

அரச அலுவலகங்களில் கையாளப்படுகின்ற அலுவலக முறைகள் பற்றிய அடிப்படை அறிவும், அவ் அறிவினை செய்முறையாக பயன்படுத்தும் திறனும், கடமையுடன் தொடர்புடைய ஆவணங்களை நன்கு புரிந்துகொண்டு தெளிவாக சுருங்கிய குறிப்புகளின் மூலம் தமது கருத்துக்களை/ஆய்வுகளை சமர்ப்பிக்கும் ஆற்றலும் விதிக்கப்பட்ட கட்டளையின் கீழ் கடிதமொன்றை வரைவுபடுத்தும் திறனும் சோதிக்கப்படும். இவ் வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்திருக்கும்.

**பகுதி** I - சுருக்க விடைகளை எதிர்பார்க்கப்படும் வினாக்களை கொண்டமைந்திருக்கும் வினாத்தாளிலேயே விடை அளித்தல் வேண்டும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். (25 புள்ளிகள்)

**பகுதி** II - அமைவு முறை கட்டுரைகளிலான வினாத்தாளாகும். நான்கு வினாக்களில் மூன்றுக்கு விடையளித்தல் வேண்டும். (75 புள்ளிகள்)

14.2 **கணக்கீட்டு முறைகள்** : (பாட இலக்கம் - 02)

அரச அலுவலகங்களில் கையாளப்பட்டு வருகின்ற ஆரம்ப கணக்குகள் மற்றும் கணக்கு கட்டுப்பாட்டுப் புத்தகங்களின் செயற்பாடு பற்றிய அறிவையும் புரிந்துணர்வையும் அளவிட இதனால் எதிர்பார்க்கப்படுகிறது. இவ் வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்திருக்கும்.

**பகுதி** I - சுருக்க விடைகளை எதிர்பார்க்கும் வினாக்களை கொண்டமைந்திருக்கும் வினாத்தாளிலேயே விடை அளித்தல் வேண்டும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். (25 புள்ளிகள்)

**பகுதி** II - அமைவு முறை கட்டுரைகளிலான வினாத்தாளாகும். நான்கு வினாக்களில் மூன்றுக்கு விடையளித்தல் வேண்டும். (75 புள்ளிகள்)

14.3 **கணினிப் பரீட்சை** : (பாட இலக்கம் 03)

பரீட்சார்த்தி பின்வரும் ஆற்றல்களைக் கொண்டுள்ளாரா என சோதிப்பது இப் பரீட்சையின் நோக்கமாகும்.

I. தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படை எண்ணக்கருக்கள்

II. வின்டோஸ் இயக்க முறைமை

III. கோப்பு முறை

IV. சொல் முறை வழிப்படுத்தல் — அடிப்படைத் திறைமைகள், திரைக்கு பழக்கப்படல், பாடப்பதிப்பு பாடங்களை நேர்ப்படுத்தல், எழுத்துரு வகையும் பண்புகளும், பந்தி உள்தள்ளல், வரி வெளிகள் மாற்றுதல், தத்தல் அமைப்பு, பாடத்தை கண்டுபிடித்தலும் மாற்றிடுதலும், உச்சரிப்பு மற்றும் இலக்கணம், தேசோரஸ், நிரல்கள், பக்க அமைவு செயற்பாடுகள்,

| | | |
|---|---|---|
| | | ஆவணங்களை அச்சிடல், அட்டவணைகள் தயாரித்தல், பாடத்தை வரிசைப்படுத்தல், கோப்பு முகாமை, அஞ்சல் இணைப்பு, "மக்ரோ" தொழிற்பாடு |
| V. | விரிதாள் | அடிப்படைத் திறைமைகள் வடிவமைத்தல் (formatting) பதிப்பித்தல் நிரல்களும் வீச்சும், செருகுதல், நீக்குதல் தகவல்களை வரிசைப்படுத்தல் வரைபடங்களைப் படைத்தல் அச்சிடல் @ பயன்பாடு (@ function) மக்ரோக்களுடன் பணியாற்றல், கோப்பு முகாமை |
| VI. | இணையம் | இணையத்தை அறிமுகப்படுத்தல், உலகளாவிய வலையமைப்பு, எவ்வாறு வழிகண்டறிதல் இணைய செயல்முறை |
| VII | மின்னஞ்சல் (e-mail) | அறிமுகம், அடிப்படைத்திறமைகள், அஞ்சல்களைப் பெறுதல், அனுப்புதல், பதிலளித்தல், இணைப்புகளுடன் செயலாற்றல், புனைப் பெயர்களை உருவாக்கி பயன்படுத்தல், தகவல்களை இயற்றுதல் |

இவ் வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது.

**பகுதி** I - பல்விருப்பு/சுருக்கமான பதில்களை எதிர்பார்க்கும் 40 வினாக்களைக் கொண்டமைந்திருக்கும். காலம் - 45 நிமிடங்கள் (40 புள்ளிகள்)

**பகுதி** II - பகுதி அமைவு ரீதியிலான 05 வினாக்கள், காலம் - 45 நிமிடங்கள் (60 புள்ளிகள்)

15.0 பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச் சட்டதிட்டங்களை மீறுபவர்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்பட நேரிடும்.

16.0 இப் பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத எவ் விடயம் தொடர்பாகவும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

17.0 இவ் அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் அல்லது முரண்பாடுகள் காணப்படின் சிங்கள அறிவித்தலே வலுவுள்ளதாகும்.

கே.வீ.பீ.எம்.ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

பொது நிருவாகம், முகாமைத்துவம் மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2018, யூன் 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இன் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2012(II) (2018)

Efficiency Bar Examination for Officers in Grade III of Public Management Assistants' Service - 2012 (II) (2018)

உங்களுக்கு உரித்தான சேவை (இதை பூரணப்படுத்தமுன் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6.0 ஐப் பார்க்கவும்)

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |

(வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 4.0 இன் படி நீங்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரத்தை விருப்ப ஒழுங்கில் குறிப்பிடவும்.)

(இதை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)
(இது பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது)

1.0 1.1 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : -----------------------------
(உதா: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களை இறுதியில் இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : -----------------------------
(உதா.: GUNAWARDHANA, H.M.S.G.)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்): -----------------------------

2.0 2.1 அலுவலகத்தின் /திணைக்களத்தின் /நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்):---------------

2.2 அலுவலகத்தின் /திணைக்களத்தின் /நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (சிங்களத்தில்/தமிழில்) : -------

2.3 பிரவேச அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்): ------------------------

3.0 3.1 பால் :
பெண் - 1
ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

3.2 பிறந்த திகதி : -

ஆண்டு: மாதம்: திகதி :

3.3 தேசிய ஆளடையாள அட்டையின் இலக்கம்:

4.0 நீங்கள் இம்முறை பரீட்சையில் தோற்ற உள்ள பாடம்/பாடங்கள்:

(வர்த்தமானப் பத்திரிகையின் பந்தி 14.0 ஐ பார்க்கவும்)

| தொடர் இலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |

5.0 தற்போது வகிக்கும் பதவி :

5.1 பதவி : -----------------------------

5.2 நியமனக் கடிதத்தின் இலக்கம்: -----------------------------

6.0

6.1 நீங்கள் பரீட்சைக்கு முதன்முதலாக தோற்றுகின்றீர்களா? : -----------------------------

6.2 பரீட்சைக்கு தோற்றுவது முதற் தடவை அல்லாது இருப்பின் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம்: -----------

6.3 தபால் /உபதபால் காரியாலயம் : -----------------------------

6.4 பற்றுச்சீட்டு இலக்கம் : -----------------------------

6.5 திகதி : -----------------------------

முழுப் பரீட்சைக்கான பரீட்சைக்கட்டணம் ரூபா 500 உம் ஒரு பாடத்திற்காக ரூபா 250 உம் ஆவதுடன் அத் தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இங்கு ஒட்டிவிடவும். பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை தன்வசம் வைத்துக்கொள்வது பிரயோசனப்படலாம்.

மேற் குறிப்பிட்டுள்ள விபரங்கள் சரியானவையென்றும், மேலே காட்டப்பட்டுள்ள மொழிமூலமாக பரீட்சைக்கு தோற்றுவதற்கு நான் உரித்துடையேன் என்றும், இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இங்கு ஒட்டப்பட்டுள்ள ரூபா ............ பெறுமதியான பற்றுச்சீட்டு என சான்றுப்படுத்துகின்றேன். இப்பரீட்சை தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு அமைந்தொழுக நான் உடன்படுகிறேன்.

திகதி : -----------------
-----------------------------
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

**குறிப்பு** :- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அந்தத் திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் கையொப்பமிட வேண்டும்.

**கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்**

எனது அலுவலகத்தின் அலுவலரும் தனிப்பட்ட முறையில் எனக்கு தெரிந்தவருமான திரு./ திருமதி/ செல்வி ............... என்பவர், .................................. ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளது என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

-----------------------------
சான்றுப்படுத்துபவரின் கையொப்பமும்,
பதவி முத்திரையும்.

பெயர் : ------------------
பதவிப் பெயர் : ------------------
முகவரி : ------------------
திகதி : ------------------

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

I. மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டதென்றும்;

II. இவ் அலுவலர் இப்பரீட்சைக்கு இதற்கு முன் தோற்றியுள்ளார்/தோற்றவில்லை* என்றும்;

III. அலுவலர் இதற்கு முன்பு பரீட்சைக்கு தோற்றியிருப்பதனால் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு இவ் விண்ணப்பத்தில் ஒட்டப்பட்டுள்ளதென்றும்;

IV. அலுவலர் இப் பரீட்சைக்குத் தோற்ற தகுதியுடையவர் என்றும்,

இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

*தேவையற்றவைகளை கீறிவிடவும்

-----------------------------
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் : --------------------
பதவிப் பெயர் : --------------------
முகவரி : --------------------
திகதி : --------------------

திருத்தம்

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்**

கணக்காய்வு பரீட்சகர் சேவையின் தரம் II இற்கு கணக்காய்வு பரீட்சகர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018

2018, மே 11 ஆந் திகதிய 2071 ஆம் இலக்க வர்த்தமானியின் 5-329 ஆம் அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2018, யூன் 29 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

எச். எம். காமினி விஜேசிங்ஹ,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
இல. 306/72, பொல்தூவ வீதி,
பத்தரமுல்லை,
2018, யூன் 20.

6-1150

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

## உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிட்டுள்ள கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம்:-

கம்பனியின் பெயர்: பெர்ஸ்ட் டீம் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிறைவேட்) லிமிடட்
பதிவிலக்கம்: பீவீ 131949
பதிவு முகவரி : இல. 53, அநகாரிக்க தர்மபால மாவத்தை, கண்டி
பதிவுத் திகதி : 2018.05.04

கம்பனிச் செயலாளர்.

6-746

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிட்டுள்ள கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம்:-

கம்பனியின் பெயர் : தம்பவெல புட் புரொடக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 131911
பதிவு முகவரி : இல. 10, கிறீன் வுட் ரேன்ஜ், பிச்சமல்வத்த வீதி, குருதெனிய, கண்டி
பதிவுத் திகதி : 2018.05.04

கம்பனிச் செயலாளர்.

6-747

**ஸ்ரேடியன் கெப்பிட்டல் மெனேஜ்மன்ட் (பிறைவேட்) லிமிட்டட்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், கூட்டிணைக்கப்படல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்:-

ஸ்டரேடியன் கெப்பிட்டல் மெனேஜ்மன்ட் (பிறைவேட்) லிமிட்டட் என்ற பெயரில் புதிய கம்பனியொன்று 2018 ஆம் ஆண்டு மே மாதம் 22ஆந் திகதி பீவீ 00200414 என்ற இலக்கத்தின் கீழ் கூட்டிணைக் கப்பட்டுள்ளதென்பதையும், புதிய கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரியானது இல. 16- 03, 16 ஆம் மாடி, கிழக்குக் கோபுரம், உலக வர்த்தக மையம், ஏச்சிலன் சதுக்கம், கொழும்பு 1 இல் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நாம் பகிரங்க அறிவித்தல் தருகின்றோம்.

சரவணன் நீலகண்டன்,
பணிப்பாளர்,
என் அன்ட் என் ஏஜென்ஸ்
அன்ட் செகரட்டறீஸ் (பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனியின் கம்பனிச் செயலாளர்கள்.

எம் அன்ட் என் கட்டிடம்,
(5 ஆம் மாடி),
இல. 2, டீல் பிளேஸ்,
கொழும்பு 00300.

6- 748

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பெயர் : டைல் ஓஸோன் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இலக்கம் : பீவீ 131947
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : இல.269, நாவல வீதி, நாவல
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.05.09

கே. எம். ஷெஹான்,
கம்பனிச் செயலாளர்.

6- 749

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வரையறுக்கப்பட்ட கம்பனி சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆந் திகதி வரையறுக்கப்பட்ட கம்பனியாக பதிவு செய்யப்பட்டதாக பொதுமக்களுக்குத் தரும் அறிவித்தல்:-

கம்பனியின் பெயர் : ஏ ஆர் சீ மைக்ரோ கிரெடிட் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 128375
பதிவு செய்யப்பட்ட முகவரி : # 240/5, மகாமாயபுரம், திருகோணமலை

சிலோன் கோர்ப்பரேட் செக்ரடரீஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
நிறுவனத்தின் செயலாளர்.

6- 764/1

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வரையறுக்கப்பட்ட கம்பனிச் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதி வரையறுக்கப்பட்ட கம்பனியாக பதிவு செய்யப்பட்டதாக பொதுமக்களுக்குத் தரும் அறிவித்தல்:-

கம்பனியின் பெயர் : பாலா கன்சியூமர் புரொடக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 00200407
பதிவு செய்யப்பட்ட முகவரி : # 157, அம்பலாங்கொடல்லா, வவுனியா

சிலோன் கோர்ப்பரேட் செக்ரடரீஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
நிறுவனத்தின் செயலாளர்.

6- 764/2

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வரையறுக்கப்பட்ட கம்பனிச் சட்டத்தின் 9(1) இன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி வரையறுக்கப்பட்ட கம்பனியாக பதிவு செய்யப்பட்டதாக பொதுமக்களுக்குத் தரும் அறிவித்தல்:-

கம்பனியின் பெயர் : பென்தோட்ட சூப்பர் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 131821
பதிவு செய்யப்பட்ட முகவரி : 401/ஏ, பல்லேவளவத்த, பஹளா எரியகம, பேராதனை

சிலோன் கோர்ப்பரேட் செக்ரடரீஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
நிறுவனத்தின் செயலாளர்.

6- 764/3

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வரையறுக்கப்பட்ட கம்பனிச் சட்டத்தின் 9(1) இன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல' மாதம் 20 ஆந் திகதி வரையறுக்கப்பட்ட கம்பனியாக பதிவு செய்யப்பட்டதாக பொதுமக்களுக்குத் தரும் அறிவித்தல்:-

கம்பனியின் பெயர் : கெசுவல் ஜீன்ஸ்வெயார் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 121742
பதிவு செய்யப்பட்ட முகவரி : #577, சேனாரத்கம, கடுகஸ்தோட்டை

சிலோன் கோர்ப்பரேட் செக்ரடரீஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
நிறுவனத்தின் செயலாளர்.

6- 764/4

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வரையறுக்கப்பட்ட கம்பனி சட்டத்தின் 9(1) இன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28ஆந் திகதி வரையறுக்கப்பட்ட கம்பனியாக பதிவு செய்யப்பட்டதாக பொதுமக்களுக்குத் தரும் அறிவித்தல் :-

கம்பனியின் பெயர் : ட்ரியோ அப்பரல் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 131236
பதிவு செய்யப்பட்ட முகவரி : #73 எம், அலுத் வலுவ சாலை, நுகவல, கண்டி

சிலோன் கோர்ப்பரேட் செக்ரடரீஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
நிறுவனத்தின் செயலாளர்.

6- 764/5

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வரையறுக்கப்பட்ட கம்பனிச் சட்டத்தின் 9(1) இன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28ஆந் திகதி வரையறுக்கப்பட்ட கம்பனியாக பதிவு செய்யப்பட்டதாக பொதுமக்களுக்குத் தரும் அறிவித்தல் :-

கம்பனியின் பெயர் : வி எம் கே ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 128498
பதிவு செய்யப்பட்ட முகவரி : 43/21 ஏ, அலுதத்தோட்ட சாலை, மாவில்மட, கண்டி

சிலோன் கோர்ப்பரேட் செக்ரடரீஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
நிறுவனத்தின் செயலாளர்.

6- 764/6

**பெயர் மாற்றம் பற்றிய பகிரங்க அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2).ஆம் பிரிவின் பிரகாரம் கீழ்க்காணும் பெயர் மாற்றப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பழைய பெயர் : ஸ்பார்க்ஸ் டிஜிடல் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் இல. : பீவீ 9388
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 146, டோசன் வீதி, கொழும்பு 2
கம்பனியின் புதிய பெயர் : பிரேண்ட்கொம் குளோபல் (பிறைவேட்) லிமிட்டட்
பெயர் மாற்றம் செய்யப்பட்ட திகதி : 2018.05.18

கம்பனிச் செயலாளர்.

6- 765

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1).ஆம் பிரிவின் கீழ் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : என்ட்லஸ் சம்மர் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 132068
கூட்டிணைப்புத் திகதி : 2018.05.23
பதிவு முகவரி : இல.116பி, ரொஸ்மீட் பிளேஸ், கொழும்பு 07

சீ மத்தீவ் அன்ட் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

sec/(2) 2013/311

6- 776

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் ஒரு வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய கம்பனியின் கூட்டிணைப்பு அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ஹுரூவா செங் டிரெவல் ஏஜன்சி (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 00200439
கூட்டிணைப்புத் திகதி : 2018.05.24
பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : இல.10, தோன் கரோலிஸ் மாவத்தை, ஜாவத்த, கொழும்பு 5, ஸ்ரீ லங்கா

கம்பனிச் செயலாளர்: கே. ஏ. எம். எச். கொடித்துவக்கு, சட்டத்தரணி.

6- 778

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல் :-

கம்பனியின் பெயர் : நவிடாஸ் க்லோபல் சொலுசன் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 125640
ஒன்றிணைக்கப்பட்ட திகதி : 2017.09. 18
கம்பனி முகவரி : 62/11, 1/1, டாப்ரே மாவத்தை, கொழும்பு 5

கம்பனியின் பெயர் : ஸ்கை கேட் கன்ஸ்ட்ரக்சன் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 127196
ஒன்றிணைக்கப்பட்ட திகதி : 2017.11. 13
கம்பனி முகவரி : 288/5, றோயல் கார்டன் , ஸ்ரீ ஜயவர்தனபுர, ராஜகிரிய

கம்பனியின் பெயர் : ஹைபிரிட் கார்கோடெக்சர் டிவெலெப்மன்ட் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 127194
ஒன்றிணைக்கப்பட்ட திகதி : 2017.11. 13
கம்பனி முகவரி : ஜி டி பி பில்டிங், 3 ஆம் மாடி, இலக்கம் 58, தர்மபால மாவத்தை, கொழும்பு 5

கம்பனியின் பெயர் : சன்மி லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 130336
ஒன்றிணைக்கப்பட்ட திகதி : 2018.03. 02
கம்பனி முகவரி : 417/32, பெர்னான்டோ மாவத்தை, சந்தவல, கட்டான

கம்பனியின் பெயர் : ஷடோவ் க்ரோவ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 130275
ஒன்றிணைக்கப்பட்ட திகதி : 2018.03. 15
கம்பனி முகவரி : 227/30, நிர்மன மாவத்தை, நாவல ரோட், நுகேகொடை

கம்பனியின் பெயர் : ஹட்டோன் குரூப் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 131542
ஒன்றிணைக்கப்பட்ட திகதி : 2018.04.06
கம்பனி முகவரி : 318, டுப்லிகேஷன் ரோட், கொழும்பு 3

கம்பனியின் பெயர் : பீபொடி இன்டர்நெசனல் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 131417
ஒன்றிணைக்கப்பட்ட திகதி : 2018.04.11
கம்பனி முகவரி : 10/B/17/L, ரத்தொளுவ வீட்டுத் திட்டம், ரத்தொளுவ

6- 818

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : எல் எஸ் டி டிரேடிங் கோ (பிறைவேட்) லிமிட்டட்
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.05.03
பதிவு இல. : பீவீ 131895
முகவரி : இல.1, L M H டவர், இல. 405/1, துடுகெமுனு மாவத்தை, தலங்கம வடக்கு, தலங்கம

கம்பனிச் செயலாளர்கள்.

6- 833

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பெயர் : லேக் லொட்ஜ் போல்கோடா (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இல. : பீவீ 00200552
கம்பனி முகவரி : இல.58 /1, சாங்காபொ மாவத்தை, பரத்த, கெசெல்வத்த, பாணந்துறை
திகதி : 2018.05.28

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

மேலாண்மை மற்றும் வர்த்தக ஆலோசனை சேவைகள் ( பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

6- 855

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பெயர் : டி என் வை ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இல. : பீவீ 130451
கம்பனி முகவரி : இல. 66/3, ஆர்துசா லேன், கொழும்பு 6
திகதி : 2018.03.06

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

மேலாண்மை மற்றும் வர்த்தக ஆலோசனை சேவைகள் ( பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

6- 856

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : சுடர் அக்ரோ ஏற்றுமதி (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இல. : பீவீ 130861
கம்பனி முகவரி : இல. 6, ஹில்டன் பிளேஸ், பம்பலப்பிட்டி
திகதி : 2018.04.02

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

மேலாண்மை மற்றும் வர்த்தக ஆலோசனை சேவைகள் ( பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

6- 857

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், கீழ்க் குறிப்பிடும் நிறுவனம் பதிவு செய்யப்பட்டதாக இத்தால் அறியத்தருகின்றோம் :-

கம்பனியின் பெயர் : கிட்ஸ்புக் இலங்கை (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் பதிவு இல. : பீவீ 131856
பதிவு செய்யப்பட்ட திகதி : 2018.04.26
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : இல. 16 /ஈ, "கிம்ஹானி", கல்துடே, பாணந்துறை

கம்பனிச் செயலாளர்.

6- 922

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கொழும்பு 10, மாளிகாவத்தை, இல. 3 இல் வசிப்பிடத்தைக் கொண்ட சேக் மொஹிடீன் சரீப்டீன் தே.அ.அ. இல. 770591686V ஆகிய நான், எனது சார்பாக, கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம். என். எம். நஜீப் எழுதி அத்தாட்சிப்படுத்திய இல. 1152 மற்றும் 2017.12.30 ஆந் திகதியிடப்பட்ட விசேட அற்றோணித்தத்துவப்பத்திரத்தின் மூலம் கொழும்பு 10, மாளிகாவத்தை, இல. 23- 151/ 111 என்ற வசிப்பிடத்தைக் கொண்ட மொஹமட் ரபிக் பாத்திமா பர்சானா தே.அ.அ.இல. 795870377 V என்பவருக்கு கையளிக்கப்பட்டதுடன் இன்றைய தினம் முதல் அவ் அற்றோணித்தத்துவப்பத்திரத்தை இரத்துச் செய்வதுடன் அவ் அற்றோணித்தத்துவப்பத்திரத்தின் பிரகாரம் மேலும் கீழே உடைமை சம்பந்தமாக மேற் பெயர் குறிப்பிட்ட நபருக்கு எந்தவித அதிகாரமுமில்லை எனவும் இன்றைக்கு பிறகு இவ்விடயம் தொடர்பாகவும் நான் பொறுப்பு கூறுவதற்கு கட்டுப்பட்டு இல்லை எனவும் சகல இலங்கை வாழ் மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

6-773

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

வயிக்கால், தம்பரவில வீதி, இல. 89 என்ற இடத்தில் வசிக்கும் வர்ணகுலசூரிய தயாதேஷப்பிரிய பர்னாந்து மற்றும் அதே முகவரியில் வசிக்கும் படேபொலகே சசினி டியானா பெரேரா ஆகிய எங்களால் பிரசித்தி பெற்ற நொத்தாரிசு ஜே. கே. சாபா மினோலி பெரேரா அவர்களால் 2015.01.01 ஆந் திகதியன்று உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட 1621 ஆம் இலக்கத்தைக் கொண்ட விசேட அற்றோணி அதிகாரத்தினால் வயிக்கால், தம்பரவில வீதி, இல. 89 ஐக் கொண்ட இடத்தில் வசிக்கும் படேபொல கே டரல் லக்ஷ்மன் பெரேரா மற்றும் சக்கரவர்த்திகே ஸ்ரீயா காமன் நமணி சில்வா திருமணத்தின் பின் பெரேரா என்பவர்களுக்கு வழங்கப்பட்ட விசேட அற்றோணி அதிகார பத்திரமானது இன்று முதல் வலுவிழக்கச் செய்து இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்கூறப்பட்டவர்களினால் மேற்கொள்ளப்படும் எவ்வித செயற்பாடுகளுக்கோ கொடுக்கல் வாங்கல்களுக்கோ நாங்கள் எவ்விதப் பொறுப்பும் இல்லை என்பதை இலங்கை அரசாங்கத்திற்கும் பொது மக்கள் அனைவருக்கும் இதன் மூலம் அறியத்தருகின்றோம்.

வர்ணகுலசூரிய தயாதேஷப்பிரிய பர்னாந்து மற்றும் படேபொலகே சசினி டியானா பெரேரா.

6-829

---

### விசேட அற்றோணித் தத்துவத்தினை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கல்முனை, இல. 172/2 , பற்றிமா சிறவுன்ட் லேன் ஐச் சேர்ந்த மாக்கிரட் ஒலிவியா அவுஸ்கோன் தே.அ.அ.இல.656572469 V ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் மட்டக்களப்பு சின்ன ஊறணி இல. 79/1 சர்வோதய வீதி, நடராசா அற்புதராசா தே.அ.அ.இல. 750781942V என்பவருக்கு மட்டக்களப்பு, பிரசித்த நொத்தாரிசு பேர்ள் தர்சா வென்ஜமின் அவர்களால் 2017.04.04 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 664 ஆம் இலக்கம் கொண்டதும் மட்டக்களப்பு கிழக்கு வலயப் பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் புத்தகம் 25 ஆம் பக்கம் 04 ஆம் தொடரிலக்கம் 238 இல் 2017.04.05ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள விசேட அற்றோணித் தத்துவப்பத்திரத்தின் மூலம் வழங்கியிருந்த குறித்த அற்றோணித்தத்துவப்பத்திரத்தில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வழங்கியிருந்த அதிகாரத்தை சட்டரீதியாகவும் அதிகாரபூர்வமாகவும் இரத்துச் செய்கின்றேன் . எனது சார்பாக அவரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் இன்று முதல் நான் பொறுப்பாக இருக்க மாட்டேன் என்பதை அறிவித்துக் கொள்கின்றேன்.

6- 835

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 188ஏ, டீ சில்வா பிளேஸ், ஹைலெவல் வீதி,பன்னிப்பிட்டிய என்ற முகவரியில் வசிக்கும் லிண்டமுலகே பிரேமசிறி சில்வா (தே.அ.அ.இல. 451042092V) மற்றும் தேவரடண்டிரிகே ஹேமா மானெல் ஆகிய நாங்கள் இல. 188ஏ, டி சில்வா பிளேஸ், ஹைலெவல் வீதி, பன்னிப்பிட்டியில் வசிக்கும் லிண்டாமுலகே நிரோஷா பிரியால் சில்வா (தே.அ.அ.இல. 781630101V) என்ப வருக்கு வழங்கப்பட்டதும் பிரசித்த நொத்தாரிசு திருமதி டி. சாந்தினி விஜேசிங்ஹ என்பவரினால் 2014. 03.26 ஆந் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்ட 83 ஆம் இலக்கமுடையதும் பத்தர முல்லை, பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் 3681 ஆம் அத்தியாயம் 40 ஆம் பக்கம் தினப்புத்தக இலக்கம் 116 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதுமான அற்றோணித்தத்துவமானது 2018.05.30ஆந் திகதி முதல் செயல்வலுப்பெறும் வகையில் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதென பொது மக்களிற்கு இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

L.P. சில்வா
T.H.M. பெர்னான்டு.

6- 839

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருவதாவது, 2833 என்னும் இலக்கத்தில் 2014.04.19 ஆந் திகதியிடப்பட்டு திருகோணமலை பிரசித்த நொத்தாரிசு திரு. திலகரெத்தினம் துஷ்யந்தன் முகதாவில் இல. 52, கஸ்கிசன் வீதி, திருகோணமலை, இலங்கை என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. அலமேலு குலசபாநாதன் (தே.அ.அ.இல. 596563120V) என்பவரின் பெயரில் இல. 14, பெயாபீல்ட் குளோபஸ் , கிங்ஸ்பரி, NW90 PH, லண்டனைச் சேர்ந்த திருமதி விஜயராணி பிரபாகரன் என்பவரால் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவப்பத்திரம் 2018.06.01 ஆந் திகதி முதல் மீளப்பெறப் படுவதோடு இரத்துச் செய்யப்படுகின்றது . அன்று முதல் அற்றோணித்தத்துவக்காரால் மேற்குறிப்பிட்ட அற்றோணி தத்துவப்பத்தரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாகமாட்டேன்.

6- 848/1

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருவதாவது 2011.02.01 ஆந் திகதியிடப்பட்டு கனடாவின் ஒன்ராறியோ மாகாண பிரசித்த நொத்தாரிசு திரு. தம்பு ஸ்ரீபதி முகதாவில் இல. 52, கஸ்கிசன் வீதி, திருகோணமலை , இலங்கை என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. கதிரவேலுப்பிள்ளை குலசபாநாதன் (தே.அ.அ.இல. 532462723V) என்பவரின் பெயரில் இல. 5, ரல்ப்கோட் மாக்கம், ஒன்டாரியோ, L3X5, கனடாவைச் சேர்ந்த திருமதி ஜெயராணி நிரஞ்சன் என்பவரால் வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவப்பத்திரம் 2018.06.01 ஆந் திகதி முதல் மீளப்பெறப்படுவதோடு இரத்தும் செய்யப்படுகின்றது. அன்று முதல் அற்றோணித்தத்துவக்காரால் மேற்குறிப்பிட்ட அற்றோணித் தத்துவப் பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாகமாட்டேன்.

6- 848/2

---

### மீள் அனுமதி மற்றும் மீள் உறுப்புரிமை பெறுவதற்கான அறிவித்தல்

இரத்மலானை, காலி வீதி, இல. 338 ஐச் சேர்ந்த பெட்ரிக்பிரபாவன்ச விக்கிரமசிங்க ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேல் நீதிமன்றத்தின் மேன்மைதங்கிய பிரதம நீதியரசருக்கும் மற்றும் ஏனைய கௌரவ நீதிபதிகளுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்வது , மேல் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக நான் மீளவும் அனுமதிக்கப்பட்டு மீளவும் உறுப்புரிமை பெற்று ஆறு வாரங்கள் ஆகின்றது என்பதாகும்.

பெட்ரிக் பிரபாவன்ச விக்கிரமசிங்க .

2018.05.22.

6- 878

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

ஆன்டிகம, மதவக்குளத்தில் வசிக்கும் முஹம்மது சலீம்கே வுவைஸ் ஆகிய என்னால் மஹகெலிய, கெளிமுனே, போஹேனயில் வசிக்கும் வெத்தமுனி சானுக ஜயசஷான் சில்வா என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த அனுமதி பெற்ற பதிவாளர் திருமதி பாத்திமா என். அன்சார் அவர்களால் 2017.08.12 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட 5067 ஆம் இலக்கமுடைய அற்றோணித்தத்துவ அதிகாரம் இன்றைய தினம் முதல் இரத்துச் செய்யப்பட்டு அதிகாரம் நீக்கப்பட்டுள்ளது என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

முஹம்மது சலீம்கே வுவைஸ் .

6- 1048

---

# ஏல விற்பனைகள்

**வ/ப கார்கில்ஸ் வங்கி - கண்டி நகர மத்திய கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு ( விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏலவிற்பனை**

476 ஆம் பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமையின் விபரம்.-

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளே, பல்லேபற்று, கொழும்பு மாநகர சபை மற்றும் கொழும்பு பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட மாளிகாகந்தை கிராம அலுவலர் பிரிவில் மாளிகாகந்தை ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, 27 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள இல. 71, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை என்ற முகவரியைக் கொண்ட அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் எம்.எல்.என். பெரேரா அவர்களால் வரையப்பட்ட 1998 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் திகதியிடப்பட்ட 750 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு X எனக் குறிப்பிடப்பட்டுள்ள ( அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் டி. ஜீ. எம். பி. பெர்னாண்டோ அவர்களால் வரையப்பட்ட 1996ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதியிடப்பட்ட 5017 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு X மற்றும் துண்டு Y எனவும், 1996 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதியிடப்பட்ட 5016 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு H எனவும் குறிப்பிடப்பட்ட காணிகளின் ஒன்றிணைப்பாகும்) பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு மேற்கூறப்பட்ட 750 ஆம் இலக்க வரைபடத்திற்கமைய கொழும்பு காணிப்பதிவகத்தில் D 80/55 ஆம் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**காணியின் விஸ்தீரணம்: 00ஏ.00றூ. 29.45பே.**

கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். சோலங்காராச்சி குணதிலக அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதியிடப்பட்ட 476 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் கேம்பிரிஜ் டிரேடர்ஸ் எனும் பெயரில் பங்காளித்துவ வியாபாரத்தை நடத்தி வரும் சப்பானி சந்திரசேகர மற்றும் நாளினி நட்டாசா சந்தரசேகர ஆகியோர் பிணையாக வரையறுக்கப்பட்ட கார்கில்ஸ் வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.

வரையறுக்கப்பட்ட கார்கில்ஸ் வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி, 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதி புதன்கிழமை மு.ப. 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும்.

**காணிக்கு செல்வதற்கான வழி :** கொழும்பு நகர மத்தியிலிருந்து மருதானை வீதி /ஒறாபிபாஷா மாவத்தை, மருதானை பொலிஸ் நிலையத்தை தாண்டியதும் உள்ள வஜிரஞான மாவத்தையில் பிரவேசிக்கவும். குறித்த சொத்து மருதானை வீதியிலிருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் வஜிரஞான மாவத்தையில் இடது பக்கத்தில் அமைந்துள்ளது.

**தீர்மான அறிவித்தலுக்கு:** தீர்மான அறிவித்தலுக்கு 2018.02.16ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி அறிவித்தலையும், “லக்பிம”, “டெயிலி நியூஸ்” மற்றும் “தினக்குரல்” ஆகிய பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;

(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;

(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 21/2% மற்றும் அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும் ;

(4) மொத்த விளம்பரச் செலவு 50%;

(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 1,500;

(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம்.

கொள்முதல் விலையின் மிகுதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்டரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 011- 7640450 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் வரையறுக்கப்பட்ட கார்கில்ஸ் வங்கியின் சட்டப்பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

‘முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.’

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே நாடு, ஒரே ஏலவிற்பனையாளர்,
125 வருடகால மகோன்னத சேவை.

தலைமை அலுவலகம் :
24, டொரிங்டன் வீதி,
கண்டி.
தொலைபேசி : 081-2227593
தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371
மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk

நகர அலுவலகம் :
6A, பெயர் பீல்ட் கார்ட்ன்,
கொழும்பு -08
தொலைபேசி : 011-2671467
011-2671468
தொ.பே./ஃபக்ஸ்:011-2671469
மின்-அஞ்சல் :
schokman@ samera 1892.com

இணையத்தளம் : www.sandslanka.com

6- 743

---

**செலான் வங்கி பீஎல்சீ - பெல்மதுல கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**ஏல விற்பனை**

“கடன்பட்டோர்” என்ற வகையில் பெல்மதுலவைச் சேர்ந்த வக்கும்புர கள்கானமலாகே ஷரித் கசிந்த வக்கும்புர என்பவருக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பீ எல் சீக்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டத்தில் நவடுன் கோரள உட பத்து பெல்மதுல கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளூர் அதிகாரசபையான பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பெல்மதுல கிராமத்தில் அமைந்துள்ள “பண்டாரவத்த” என்று அழைக்கப்படுகின்ற காணி, இரத்தினபுரி மாவட்ட நீதிமன்ற வழக்கு இல. 5811/ P அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எம் வர்ணசூரிய என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1998.10.02 இல் திகதியிடப்பட்ட நிலவரைப்பட இல. 074 துண்டு 1 சகலதும் பிரிக்கப்பட்டு அதன் வீதி வழி முறைகள் அதனுடாகவும் குறிக்கப்பட்டுள்ள காணி அங்கு காணப்படுகின்ற கட்டிடம் சாதனங்கள், மரங்கள், பயிர்தோட்டங்கள் மற்றும் அனைத்துடனும் மூன்று தசம் ஐந்து பேர்ச்சர்ஸ் (0ஏ.0றூ.3.5பே.) அல்லது 0.0088 ஹெக்டயர் விஸ்தீரணத்தை நிலவரைப்பட இல. 074 துண்டு 1 கொண்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்டுள்ள காணியை நான் 2018 யூலை மாதம் 12ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.-** பெல்மதுல மணிக்கூட்டு கோபுர சந்தியிலிருந்து பதுளை வீதி மார்க்கமாக சுமார் 50 மீ. செல்லவும். குறிப்பிட்ட சொத்து வீதியின் இடது கைபக்கத்தில் நீதிமன்ற வளாகத்தின் எதிர் பக்கத்தில் அமைந்திருக்கும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.-** தயவுசெய்து 2018.01.19 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி 2018.01.27 ஆந் திகதி டெயிலி மிரர், லங்காதீப பத்திரிகைகளையும் மற்றும் 2018.01.18 ஆந் திகதிய “தினக்குரல்” பத்திரிகைகளையும் பார்க்கவும்.

2017.10.25 ஆந் திகதியன்று நடைபெற்ற பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இன் பணிப்பாளர்கள் சபை கூட்டத்தில், பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

"கடப்பாடுடையவரான ஈடுவைத்தவரான அந்தனி பதுகே பிரதீப் பிஸ்வஜித் சில்வா மற்றும் கடப்பாடுடைய வரான நாரன்கொட ராலலாகே பிரியங்கா தில்ருக்ஷி ஆகியோர், வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி மற்றும் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் என முன்னர் அழைக்கப்பட்ட பதிவு இல. பீகியூ 48 ஐக் கொண்ட வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு ஆர்.ஆர்.எல்.சி ரணசிங்ஹ அவர்களால் அத்தாட்சிபடுத்தப்பட்டு 2014.09.22 திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 545 இன்மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணைதவறியுள்ளார்களாதலாலும்:

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. (இதனகத்துப் பின்னர் சிலவேளைகளில் "வங்கி" என அழைக்கப்படும்) இற்கு சொல்லப்பட்ட ஈட்டு முறி இல. 545 இன் மூலம் 2017.10.02 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதி வரை ஐம்பத்தைந்து இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து அறுநூற்று அறுபத்தொன்பது ரூபா எண்பத்தேழு சதம் (ரூபா 55,68,669.87) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு பதினெட்டு சதவீத (18%) வட்டியுடன் சேர்த்து பண முதல் கணக்கின்மீது ஐம்பத்தெட்டு இலட்சத்து தொண் ணூறாயிரத்து முந்நூற்று முப்பத்தாறு ரூபா தொண்ணூற்று நான்கு சதம் (ரூபா 58,90,336.94) கொண்ட தொகை மற்றும் 2017.10.01 ஆந் திகதி வரையான வட்டியும் தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாதலாலும்:

சொல்லப்பட்ட தொகை ஐம்பத்தெட்டு இலட்சத்து தொண்ணூறாயிரத்து முந்நூற்று முப்பத்தாறு ரூபா தொண்ணூற்று நான்கு சதம் (ரூபா 58,90,336.94) ஐ, 1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய பணங்கள் மற்றும் செலவுகள் மற்றும் மேற்கூறப்பட்ட திகதியிலிருந்து விற்பனை திகதி வரையான வட்டியுடனும் சேர்த்து ஏதேனும் கொடுப்பனவுகள் எவையேனும் இருப்பின் அவற்றையும் கழித்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள ஈட்டு முறி இல. 545 இன்மூலம் கடப்பாடுடையவரான ஈடுவைத்தவரான அந்தனி பதுகே பிரதீப் பிஸ்வஜித் சில்வா மற்றும் கடப்பாடுடையவரான நாரன்கொட ராலலாகே பிரியங்கா தில்ருக்ஷி ஆகியோரினால் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்ய, 1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின் பிரகாரம், கண்டி மாவில்மடை, துட்டுகெமுனு மாவத்தை, இல. 369/1 ஐச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யு. ஜயசூரிய அவர்களுக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கிறதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.".

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் (தெல்கந்தை பதிவுப் பிரிவிற்குள்), சல்பிட்டி கோறளை, பள்ளே பற்று கெஸ்பேவை நகர சபை எல்லைகளுக்குள், வட்டார இல. 15, கெஸ்பேவை பிரதேச செயலாளர் பிரிவு, 567 மடபாத்தை கிராம அலுவலர் பிரிவு, மடபாத்தையில் அமைந்துள்ளதும் மடபாத்தை வீதி, வரிமதிப்பு

இல. 894/32 ஐக் கொண்டதும் "மஹவத்தை குருந்துவத்தை மொறகஹவத்தை மற்றும் தற்போது விஜேஹேன எஸ்ட்டேட் (பாகத்தின்) என அறியப்படும்" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரீ. டி. கே. ஆர். பீ. பத்தேகம அவர்களால் தயாரிக்கப்பட்டு 2014, யூலை, 26 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 4525 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 3ஏ (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. டி ஹெட்டிகே அவர்களால் தயாரிக்கப்பட்டு 1991, ஏப்பிறல், 29 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 2621 இல் துண்டு 3 இன் ஒரு மீள்நிலஅளவையாக இருக்கின்ற) என அடையாளமிடப்பட்டுள்ளதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லா வற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு 3ஏ இன் எல்லை களாவன - வடக்கு: இதே காணியின் எஞ்சிய பாகம் மற்றும் வரைபட இல. 2621 இன் துண்டு 2; கிழக்கு: வரைபட இல. 2621 இல் துண்டு 13 மற்றும் துண்டு 2; தெற்கு: துண்டு 13 (வீதிக்கான ஒதுக்கு மற்றும் 22 அடி அகல வடிகால்) மற்றும் வரைபட இல. 2621 இல் துண்டு 4: மேற்கு: வரைபட இல. 2621 இல் துண்டு 4 மற்றும் இதே காணியின் எஞ்சிய பாகம். இது, வரைபட இல. 4525 இற்கு அமைய பன்னிரண்டு தசம் ஆறு சைபர் பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 12.60பே.) விஸ்தீரணமுடையது: தெல்கந்தை காணி பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

தேவிகா ஹல்வத்துர,
முகாமையாளர் - அறவீடுகள்.

6-885

---

**கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் படி கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கடன் கணக்கு இலக்கங்கள்: 1774626 மற்றும் 2039699

உடவத்த ரன்ஜித் உடவத்த

2018.02.23 ஆந் திகதி கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் பின்வருமாறு.

"கடன் எடுத்த உடவத்த ரன்ஜித் உடவத்த கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி சார்பாக இவ் அட்டவணையில் 1 ஆவது சொல்லப்பட்ட காணியை இரத்தினபுரி பிரசித்த நொத்தாரிசு 2006.07.05 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 3460, 2008.04.28 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 4213, 2010.02.15 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 4827, 2011.08.01 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 5360, 2014.08.04 ஆந் திகதியுடைய முறி இல. 5985 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும்.

அத்துடன் கடன் எடுத்த உடவத்த ரன்ஜித் உடவத்த கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி சார்பாக இவ் அட்டவணையில் 2 ஆவது சொல்லப்பட்ட காணி சம்பந்தமாக இரத்தினபுரி பிரசித்த நொத்தாரிசு டி. எம். பி. சி. குணதிலக்க வின் 2012.03.09 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 5545, 2013.08.02 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 5813, 2014.08.04 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 5987 மற்றும் 2016.11.07 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 6638 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும், அத்துடன் 2017.11.23 ஆந் திகதி வரை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சிக்கு ரூபா 91,45,316.00 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டு 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் படி மேற்படி ஈட்டு முறி இலக்கங்கள் 3460, 4213, 4827, 5360, 5985, 5545, 5813, 5987 மற்றும் 6638 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள இவ் அட்டவணையில் 1 ஆவது மற்றும் 2 ஆவது சொல்லப்பட்ட காணிகளை மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 91,45,316.00 வுடனும் 2017.11.24 ஆந் திகதி முதல் ஏலத் திகதி வரை ரூபா 2,900,000.00 பணத்தொகைக்கு ஆண்டொன்றுக்கு 16% சத வட்டியும், விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக, கொழும்பு 12, புதுக்கடை வீதி, இலக்கம் 200, 2 ஆவது மாடியில் ஏலதாரருக்கு திரிவின்கா சேனாநாயக்க உத்தரவு பெற்ற ஏலதாரர் எல்.பி. சேனாநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்ட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.".

**1 வது அட்டவணை**

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், எல உட பலாத்த மெத கோரளையில் பலாங்கொட நகர சபை எல்லையில் பலாங்கொட பிரதேச சபை எல்லையில் பலாங்கொட கிராம அலுவலர் தொகுதியில் வட்டுகர கொட கிரமாத்தில் உள்ள வெரலுகெட்டிய முகலான காணிக்கு நில அளவையாளர் ஏ. இரத்தினம் 1991.08.17 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 2737 காண்பிக்கப்பட்ட லொட் D, காணியின் விஸ்தீரணம்: வடக்கு லொட் 82; கிழக்கு: வரைபட இலக்கம் 2737 இல் காண்பிக்கப்பட்ட லொட் E; தெற்கு: வரைபட இலக்கம் 2737 இல் காண்பிக்கப்பட்ட லொட் H; மேற்கு: வரைபட இலக்கம் 2737 இல் காண்பிக்கப்பட்ட லொட் A இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 20பே.) இக்காணியில் உள்ள எல்லாம் சேர்த்து, இரத்தினபுரி காணி பதிவகத்தில் E 183/242 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**2 வது அட்டவணை**

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், எலதுவ பத்து, மெத கோரளையில் பலாங்கொட பிரதேச சபை எல்லையில் பலாங்கொட கிராம அலுவலர் தொகுதியில் வத்துகரகொட கிராமத்தில் உள்ள தனவத்தயேன அல்லது தெனவத்தயேன மற்றும் எகொடவத்தயேன அல்லது தெனவத்தயேன மற்றும் எகொடவத்தயேன அல்லது கொடவத்தயேன காணிக்கு நில அளவையாளர் ஆர். எம். களுபண்டாவின் 1985.07.03 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம்168 காண்பிக்கப்பட்ட லொட: 02 இக்காணியின் எல்லைகள் - வடக்கு: ரோட்; கிழக்கு: வரைபடம் இலக்கம் 477 காண்பிக்கப்பட்ட லொட் 164 வேலி மற்றும் வரைபட இலக்கம் 168 இல் லொட் 03; தெற்கு: வரைபட இலக்கம் 168 இல் லொட் 05 மற்றும் 04; மேற்கு: வரைபட இலக்கம் 168 இல் லொட் 01 மற்றும் 04 இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 18.8பே.) இக்காணியில் உள்ள எல்லாம் சேர்த்து, இக்காணி இரத்தினபுரி காணி பதிவகத்தில் E 196/242 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேல் சொல்லப்பட்ட காணி தற்சமயம் வரையப்பட்ட வரைபடப் படி மேற்படி வத்துகரகொடயில் அமைந்துள்ள தண்ணவத்தயேன அல்லது தென்னவத்தயேன மற்றும் எகொடவத்தயேன அல்லது கொடவத்தயேன காணிக்கு நில அளவையாளர் இ. டி. பி. பெரேராவின் 2008.06.30 ஆந் திகதியுடைய வரைபடம் காண்பிக்கப்பட்ட லொட் 01 எல்லைகள் - வடக்கு: இலக்கம் 3090 ரோட் (நகர சபை); கிழக்கு: எப்.வி.பி 477யில் லொட் 163 மற்றும் நில அளவையாளர் எம். களுபண்டாவின் வரைபட இலக்கம் 168 இல் லொட் 03; தெற்கு: நில அளவையாளர் ஆர். எம். களுபண்டாவின் வரைபட இலக்கம். 168 இல் லொட் 5 மற்றும் மேற்கு பாதை. இக்காணியின் விஸ்தீரணம் 0ஏ. 0றூ. 20.20பே. அல்லது 0.05114 ஹெக்டயார். இக்காணியும் அதிலுள்ள கட்டிடமும் மற்றும் அதிலுள்ள எல்லாம் சேர்த்து.

(திருமதி) ரஞ்சனி கமகே,
கம்பனிச் செயலாளர்.

6-874

---

**செலான் வங்கி பீ.எல்.சீ. - காலி கிளை**

*1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகள் சட்டத்தின் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) 04 ஆம் பிரிவின் கீழ் செலான் வங்கி பீ.எல்.சீ. இன் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானம்*

இத்தால் அறியத்தரப்படுவதாவது 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) 08 ஆம் பிரிவின் கீழ் 2018.05.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் செலான் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர் சபையினரால் வங்கியின் உபயோகத்திற்காக விசேடமாவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானமாகும்.

கணக்கு இலக்கம் 0160-34460845-101

(2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரகாரம் கம்பனி பதிவு இலக்கம் P.Q.9) இன் கீழ் பதிவு செய்யப்பட்ட செலான் வங்கி பீ.எல்.சீ இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு M/S டப்ளியு. தெசித்தா பிரியந்தி என்பவரால் 2014.09.17 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்திய 381 ஆம் இலக்க முறியின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்டதும் கடன் பெற்றவரான, காலியை வசிப்பிடமாக கொண்டுள்ள கொடிதுவக்கு ஆராச்சிகே ராஜனி லங்கா என்பவர் பியச சிறீ நிவச ஹவுசிங் லோன் வசதியின் கீழ் செலான் வங்கி பீ.எல்.சீ யிடம் பெற்றுக் கொண்ட கடன் தொகை மீது 2017.08.03 ஆந் திகதியன்று எழுபத்து இலட்சத்து முப்பத்தோராயிரத்து ஐநூற்று எண்பத்தாறு ரூபா ஐம்பத்தொரு சதம் (ரூபா 70,31,586.51) தொகையும் அதன் மீது 2017.08.04 ஆந் திகதி தொடக்கம் பதினெட்டு தசம் ஐந்து (18.5%) வீத வட்டியான அறுபத்தைந்து இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து முப்பத்திரண்டு ரூபா எண்பத்தேழு சதம் (65,74,032.87) தொகையும் செலான் வங்கி பீ.எல்.சி க்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகையாக நிற்பதன் காரணமாக செலான் வங்கி பீ.எல்.சீ யிடம் 381 ஆம் இலக்க முறியின் கீழ் அடகு வைக்கப்பட்டதும், இங்கு அட்டவணையில் விவரிக்கப்பட்ட ஆதனங்களின் மீது பெற்றுக் கொள்ளப்பட்டதும் செலுத்தப்பட வேண்டிய நிலுவையாக நிற்கின்ற மொத்தத் தொகையான எழுபது இலட்சத்து முப்பத்தோராயிரத்து ஐநூற்று எண்பத்தாறு ரூபா ஐம்பத்தொரு சதம் (ரூபா 70,31,586.51) தொகையும் அதன் மீது 2017.08.04 ஆந் திகதி முதல் இன்றைய தினம் வரை மேற்சொல்லப்பட்ட வட்டித் தொகைகளையும் அறவிடக் கூடியவாறான விளம்பர செலவுகளையும், ஏனைய கட்டணங்களையும் சேர்த்து அறவிடுவதற்காகவும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் (எவையும்) பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக உத்தரவு பெற்ற ஏலதாரர் திரு. துசித் கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட வேண்டுமென செலான் வங்கி பீ.எல்.சீ இன் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) கீழ் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானித்திருக்கின்றது.".

**முதலாம் ஆதன அட்டவணை**

தென் மாகாணம், காலி மாவட்டம், பிரதேச செயலாளர் கடைத் தொகுதி பிரிவு மற்றும் காலி மாநகர சபை, வெலிவிட்ட, கிராம அலுவலர் இலக்கம் 97-A பிரிவில், வெலிவத்த டெங்கெதரயில் அமைந்திருக்கும் "மீகஹாவத்த வேறு பெயர் ஜம்புகொடவத்த என்ற லொட் 01, மற்றும் வீதுருமுலவத்த என்ற லொட் 02" என அழைக்கப்படும் காணிகளின் 1/4 பங்கு 1/4 பங்கு காணியானது ஒன்றிணைக்கப்பட்டு உத்தரவு பெற்ற நில அளவையாளரான U. வேவல்வத்த, என்பவரால் 2014.07.21 ஆந் திகதியன்று தயாரிக்கப்பட்ட 2186 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் லொட் C எனக் காட்டப்பட்ட பிரித்தொதுக்கப்பட்ட காணித்துண்டாகும். அது மேற்குறிப்பிட்ட கிராம அலுவலர் பிரிவில் சரணங்கர வீதியில், வரி மதிப்பீட்டு இலக்கம் 29 இல், அமைந்திருக்கும் இரண்டு மாடிக் கட்டிடத்தோடு அதில் அடங்கியுள்ள யாவற்றையும் உள்ளடக்கிய மேற்படி லொட் C இன் எல்லைகளானவை - வடக்கு: (வரி மதிப்பீட்டு இலக்கம் 31 மற்றும் 39) இல் லொட் A மற்றும் லொட் B; கிழக்கு: சரணங்கர வீதி; தெற்கு: வளவுகளின் வரி மதிப்பீட்டு இலக்கம் 27 மற்றும் 27/1; மேற்கு: குஞ்சன் தோட்டம் (வரிமதிப்பீட்டு இலக்கம் 40) எனக் காட்டப்பட்ட அதில் அடங்கியுள்ள யாவும் ஆகும். இதன் பரப்பளவு பத்து தசம் ஆறு பேர்ச் ஆகும். (0ஏ. 0றூ. 10.6பே.) அல்லது ஹெக்டயார் 0.0268 ஆகும்.

மேல் சொல்லப்பட்ட காணியானது பின் காட்டப்பட்ட காணியின் மீள் அளவையாகும்:

தென் மாகாணம், காலி மாவட்டம், பிரதேச செயலாளர் கடைத் தொகுதி பிரிவு மற்றும் காலி மாநகர சபை, வெலிவத்த டெங்கெதரயில், கிராம அலுவலர் இலக்கம் 97 - A பிரிவல், வெலிவத்தயில் அமைந்திருக்கும் " மீகஹாவத்த வேறு பெயர் ஜம்புகொடவத்த என்ற லொட் 01, மற்றும் வீதுருமுலவத் என்ற லொட் 02" என அழைக்கப்படும் காணிகளின் 1/4 பங்கு காணியானது ஒன்றிணைக்கப்பட்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரீ. ஜே. அரம்பேவெல என்பவரால் 1993.02.27 ஆந் திகதியன்று தயாரிக்கப்பட்ட 997 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் லொட் C எனக் காட்டப்பட்ட பிரித்தொதுக்கப்பட்ட காணித்துண்டாகும். அது மேற்குறிப்பிட்ட கிராமஅலுவலர் பிரிவில் சரணங்கர வீதியில், வரி மதிப்பீட்டு இலக்கம் 29 இல், அமைந்திருக்கும் இரண்டு மாடிக் கட்டிடத்தோடு அதில் அடங்கியுள்ள யாவற்றையும் உள்ளடக்கிய மேற்படி லொட் C இன் எல்லைகளானவை - வடக்கு: லொட் A மற்றும் லொட் B; கிழக்கு: சரணங்கர வீதி மற்றும் அதே காணியின் ஒரு பகுதி; தெற்கு: அதே காணின் ஒரு பகுதி; மேற்கு: குஞ்சன் தோட்டம் எனக் காட்டப்பட்ட அதில் அடங்கியுள்ள யாவும் ஆகும். இதன் பரப்பளவு பத்து தசம் ஆறு பேர்ச் ஆகும். (0ஏ. 0றூ. 10.6பே.) அல்லது ஹெக்டயார் 0.0268 ஆகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) கே. ஹெச்,
தலைமை அதிகாரி - சட்டப்பிரிவு.

6-904

---

**நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் (பதிவு இல. பிகியூ 118)*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங் கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேடஏற்பாடுகள்) சட்டத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் 2018.04.27 ஆந் திகதியன்று கீழ்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பனாமுல்ல ஆராச்சிகே கசுன் தனுஷ்க லக்மால்

"பிணைப்படுத்தியவர் மற்றும் அடமானதாரராகிய பனாமுல்ல ஆராச்சிகே கசுன் தனுஷ்க லக்மால் காலிக்கான பிரசித்த நொத்தாரிசு குலசேகர அபயரத்ன அதிகாரம் முதியான்சே றாலஹாமிலாகே நேத்ராராணி குலசேகரவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.02.20 ஆந் திகதிய 995ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் இதனுடனுள்ள அட்டவணையில் மேலும் பூரணமாக விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் கட்டடங்கள், உரிமைகளை ஈடாக மற்றும் அடமானமாக இல. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 ஐச் சேர்ந்த நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பிஎல்சி சார்பில் பனாமுல்ல ஆராச்சிகே கசுன் தனுஷ்க லக்மாலினால் பெறப்பட்ட நிதிவசதிகளின் உரிய மீள் கொடுப்பனவுக்கு பிணையாக வைத்துள்ளதாலும்.

மற்றும் குறிப்பிட்ட பனாமுல்ல ஆரச்சிகே கசுன் தனுஷ்க லக்மால் குறித்த முறி மூலம் உத்தரவாதமளித்த வசதிகளின் மீதான செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவை செலுத்தத் தவறியுள்ளமையினாலும்

1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடும் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் அளிக்கப்பெற்ற தத்துவங்களின் கீழ் :

1. தவணைக் கடன் வசதியின் கடன் தொகையாகவுள்ள நாற்பத்தொன்பது இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்று ஏழு ரூபா இருபத்தொரு சதம் (ரூ. 49,34,997.21) தொகையையும் மூலதன நிலுவைத் தொகையாகவுள்ள நாற்பத்தைந்து இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து அறுநூற்று முப்பத்தொன்பது ரூபா முப்பத்திரெண்டு சதம் (ரூபா 45,39,639.32) தொகை மீது இணங்கப்பட்டபடி 2018.02.02 ஆந் திகதியிலிருந்து கூடுதலான வட்டியையும் உதவியாளர் செலவு, நியதிச்சட்டத் தீர்வைகள், விளம்பரச் செலவுகளைச் சேர்த்து மற்றும் அதன்பின் ஏற்பட்ட ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக,

2. மிகைப்பற்று வசதியின் கடன் தொகையாகவுள்ள பதின்மூன்று இலட்சத்து ஐம்பத்தொன்பதாயிரத்து நானூற்று எழுபத்தொரு ரூபா பதினைந்து சதம் (ரூபா 13,59,471.15) தொகையையும் மூலதன நிலுவைத் தொகையாகவுள்ள பதின்மூன்று இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து நாநூற்று இருபத்தொன்பது ரூபா ஏழு சதம் (ரூ. 13,58,429.07) தொகை மீது இணங்கப்பட்டபடி 2018.02.02 ஆந் திகதியிலிருந்து கூடுதலான வட்டியையும் உதவியாளர் செலவு, நியதிச்சட்டத் தீர்வைகள், விளம்பரச் செலவுகளைச் சேர்த்து மற்றும் அதன்பின் ஏற்பட்ட ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதனுடனுள்ள அட்டவணையில் மேலும் பூரணமாக விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் கட்டடங்கள், உரிமைகளை கொழும்பு திரிவங்க மற்றும் சேனாநாயக்க ஏலதாரர்கள் அமைப்பைச் சேர்ந்த திரு. திரிவாங்க சீ. சேனாநாயக்க அல்லது திரு.எல்.பி சேனாநாயக்கவினால் பகிரங்க ஏலத்தில் விற்கப்பட வேண்டுமென்று இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.".

### அட்டவணை

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், கொலன்ன கோரளை, தியபொத்தகம் பற்று, எம்பிலிபிற்றிய நகரசபை எல்லைக்குள்ளான எம்பிலிபிற்றிய பிரதேச செயலாளர் மற்றும் உடகம கிராம அலுவலர் பிரிவிற்குடப்பட் எம்பிலிபிற்றிய - உடகம கிராமத்தில் வரிமதிப்பீட்டிலக்கம் 195/27 இல் அமைந் நிலம், மரங்கள், கட்டடங்கள், மற்றும் அதில் நிற்கும் எல்லாம் சேர்த்து லொட்கள் 1 மற்றும் 2 ஒன்று சேர்க்கப்பட்ட "ஜாசிங்க இடத்தின் பகுதி" என அழைக்கப்படும் காணிக்கு அனுமதி பெற்ற நிலஅளவையாளர் எச். எம். ஏ. யு. நவரத்ன தயாரித்த 2014.08.21 ஆந் திகதிய 0647 ஆம் இலக்க வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் A என குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் குறித் லொட் A ஆனது வடக்கில்: பனாமுறையிலிருந்து எம்பிலிற்றிய நோக்கிய பிரதான வீதி ; கிழக்கில்: வரைபட இலக்கம் 5053 இலுள்ள லொட் B (வீதி) ; தெற்கில்: லொட் 3 மற்றும் ; மேற்கில்: வரைபட இலக்கம் 149 இலுள்ள லொட் 1 எல்லைகளையும் குறித்த 0647ஆம் இலக்க வரைபடத்தின்படி இருபது பேர்ச்சர்ஸ் (0ஏ. று0 பே20) விஸ்தீரணத்தையும் கொண்டது, மற்றும் எம்பிலிபிற்றிய காணிப் பதிவகத்தில் வொலியும் /போலியோ L69/102 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்
கொழும்பு 02.

6-891

---

### நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் (பதிவு இல. பிகியூ 118)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் 2018.04.27 ஆந் திகதியன்று கீழ்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது

எஸ். எல். போன்ஸ் எனும் நிறுவனம் மற்றும் பெயர் பாணியில் வணிகத்தில் ஒரு தனி உரிமையாளராக ஈடுபடும் சமீர விமலசிறி தேவசுரேந்ர

பிணைப்படுத்தியவர் மற்றும் அடமானதாரராகிய சமீர விமலசிறி தேவசுரேந்தர கம்பஹாவின் பிரசித்த நொத்தாரிசு பிரதீபா பிரியதர்ஷினி விக்கிரமதிலகவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016.10.06 ஆந் திகதிய 2147ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் இதனுடனுள்ள அட்டவணையில் மேலும் பூரணமாக விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் கட்டடங்கள், உரிமைகளை ஈடாக மற்றும் அடமானமாக இல. 242 யூனியன் பிளேஸ், கொழும்பு - 2 ஐச் சேர்ந்த நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பிஎல்சி சார்பில் சமீர விமலசிறி தேவசுரேந்ரவினால் பெறப்பட்ட நிதிவசதிகளின் உரிய மீள் கொடுப்பனவுக்கு பிணையாக வைத்துள்ளதாலும்.

மற்றும் குறிப்பிட்ட சமீர விமலசிறி தேவசுரேந்ர குறித்த முறி மூலம் உத்தரவாதமளித்த வசதிகளின் மீதான செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவை செலுத்தத் தவறியுள்ளமையினாலும்

1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடும் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் அளிக்கப்பெற்ற தத்துவங்களின் கீழ் :

1. தவணைக் கடன் வசதியின் கடன் தொகையாகவுள்ள முப்பது இலட்சத்து முப்பத்தெட்டாயிரத்து நூற்று தொண்ணூற்று ஏழு ரூபா அறுபத்து மூன்று சதம் (ரூபா 30,38.197.63) தொகையையும் மூலதன நிலுவைத் தொகையாகவுள்ள இருபத்தொன்பது இலட்சத்து ஏழாயிரத்து நானூற்று எண்பத்தொன்பது ரூபா ஐம்பத்தாறு சதம் (ரூபா 29,07,489.56) தொகை மீது இணங்கப்பட்டபடி 2018.03.20 ஆந் திகதியிலிருந்து கூடுதலான வட்டியையும் உதவியாளர் செலவு, நியதிச்சட்டத் தீர்வைகள், விளம்பரச் செலவுகளைச் சேர்த்து மற்றும் அதன்பின் ஏற்பட்ட ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக.

2. மிகைப்பற்று வசதியின் கடன் தொகையாகவுள்ள இருபத்தேழு இலட்சத்து இருபத்தோராயிரத்து எண்ணூற்று ஐம்பத்தேழு ரூபா எண்பத்து நான்கு சதம் (ரூபா 27,21,857.84) தொகையையும் மூலதன நிலுவைத் தொகையாகவுள்ள இருபத்தாறு இலட்சத்து எண்பத்திரெண்டாயிரத்து எண்ணூற்று எண்பத்தாறு ரூபா தொண்ணூற்று நான்கு சதம் (ரூபா 26,82,886.94) தொகை மீது இணங்கப்பட்டபடி 2018.03.20 ஆந் திகதியிலிருந்து கூடுதலான வட்டியையும் உதவியாளர் செலவு, நியதிச்சட்டத் தீர்வைகள், விளம்பரச் செலவுகளைச் சேர்த்து மற்றும் அதன்பின் ஏற்பட்ட ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதனுடனுள்ள அட்டவணையில் மேலும் பூரணமாக விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் கட்டடங்கள், உரிமைகளை கொழும்பு திரிவாங்க மற்றும் சேனாநாயக்க ஏலதாரர்கள் அமைப்பைச் சேர்ந்த திரு. திரிவாங்க சீ. சேனாநாயக்க அல்லது திரு. எல். பி . சேனாநாயக்கவினால் பகிரங்க ஏலத்தில் விற்கப்பட்ட வேண்டுமென்று இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.".

### அட்டவணை

மேல்மாகானம், களுத்துறை மாவட்டம், களுத்துறை பிரதேச சபை எல்லைக்குள்ளான இலக்கம் 710 குடா வஸ்கடுவ தெற்கு கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட குடா வஸ்கடுவ கிராமத்தில் அமைந்த மனகலவத்தை கட்டியவின் லொட் 6 என அழைக்கப்படும் காணிக்கு அனுமதி பெற்ற நில அளவையாளர் பி. டப்ளியு. எஸ். சி. விதான தயாரித்த 2012.11.10 ஆந் திகதிய 4174 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் குறித்த லொட் 6 ஆனது - வடக்கில்: இந்த வரைபடத்திலுள்ள லொட் 5 ; கிழக்கில்: வீதி; தெற்கில்: வரைபட இலக்கம் 1114 இலுள்ள லொட் 2 மற்றும் ;மேற்கில்: இந்த வரைபடத்திலுள்ள லொட் 4 எல்லைகளையும் கட்டடங்கள். மரங்கள், தோட்டங்கள் மற்றும் அதில் நிற்கும் எல்லாம் சேர்த்து பதினெட்டு தசம் எட்டு ஒன்பது பேர்ச்சர்ஸ் (0ஏ. 0றா. 18.89பே.) விஸ்தீரணத்தையும் கொண்டது. மற்றும் களுத்துறை காணிப் பதிவகத்தில் வொலியும்/போலியோ C30 /31 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதனோடு சேர்த்து வழிக்கான உரிமை பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது:

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், களுத்துறை பிரதேச சபை எல்லைக்குள்ளான இலக்கம் 710 குடா வஸ்கடுவ தெற்கு கிராம அலுவலர் பிரிவிற்குடப்பட்ட குடா வஸ்வடுவ கிராமத்தில் அமைந்த மனகலவத்தை கட்டியவின் லொட் 12 என அழைக்கப்படும் காணிக்கு அனுமதி பெற்ற நில அளவையாளர் பி. டப்ளியு. எஸ். சி. விதான தயாரித்த 2012.08.14 ஆந் திகதிய 4147ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் குறித்த லொட் 12 ஆனது- வடக்கில்: லொட் 1 மற்றும் லொட் 2 ; கிழக்கில்: வரைபட இலக்கம் 1114 இலுள்ள லொட் 2 ; தெற்கில்: லொட் 10 மற்றும் லொட் 11 மற்றும் ; மேற்கில்: கடற்கரை எல்லைகளையும் மற்றும் பதினெட்டு தசம் எட்டு ஒன்பது பேர்ச் (0ஏ. 0றா. 18.89பே.) விஸ்தீரணத்தையும் கொண்டது, மற்றும் களுத்துறை காணிப் பதிவகத்தில் வொலியும்/போலியோ C30 /37 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்
கொழும்பு 02.

6-890

---

### தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின்கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

2018, மே 22 ஆந் திகதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது:-

"(கடன்பெறுநர்களான)" 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் முறையாகக் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாகவுள்ள தும், அங்கொடையில் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதுமான நியூ ஜயந்த சோ மில்ஸ் அன்ட் டிம்பர் ஸ்டோர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெற் மற்றும் அங்கொடையைச் சேர்ந்த தனூஜா நிரோஷனி லியனகே என்பவர், தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ சார்பில் (வங்கி) பிரசித்த நொத்தாரிசு எச். எம். ஜி. திசாநாயக்க என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.12.02 ஆந் திகதிய 1051 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளதாதலாலும்/தவணை தவறியுள்ளாராதலாலும், மற்றும் இருவரும் ஹெய்யன்துடுவவைச் சேர்ந்த (கடன்பெறுநர்களான) தனூஜா நிரோஷனி லியனகே மற்றும் ஹெனரத் மொஹொட்டிகே இஷாந்த பெரேரா என்போர், தேசிய அபிவிருத்தி வங்கி சார்பில் (வங்கி) கம்பஹாவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு (திருவாட்டி) ஏஎஸ்டி சேரம் என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.12.17 ஆந் திகதிய 423 ஆம் இலக்க ஈட்டுமுறியின்மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணைதவறியுள்ளனராதலாலும்.

அத்துடன் தனூஜா நிரோஷனி லியனகே என்பவர், கீழே விவரிக்கப்பட்ட ஆதனத்துக்கும் வளவுகளுக்குமான அவரது இறையிலி உரிமை உரித்து மற்றும் அக்கறையை சொல்லப்பட்ட 1051 ஆம், 423 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின்கீழ் வங்கிக்கு ஈடுவைத்துள்ளாராதலாலும்.

அத்துடன் 2018, ஏப்பிறல் 30 ஆந் திகதியன்றுள்ள வாறாகப் ஒரு கோடியே எண்பத்து நான்கு இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து இருபத்தொரு ரூபா ஐம்பத்திரெண்டு சதம் (ரூபா 1,84,52,021.52) கொண்ட தொகை சொல்லப்பட்ட 1051 ஆம், 423 ஆம் இலக்க முறிகள்மீது வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியதாகவும் வந்துள்ளதாதலாலும்.

வங்கியின் பணிப்பாளர் சபையின், திருத்தப்பட்டவாறான 1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் (முதன்மைச் சட்டம்) தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் செயற்பட்டு, சொல்லப்பட்ட 1051 ஆம், 423 ஆம் இலக்க முறிகளினால் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ஒரு கோடியே எண்பத்து நான்கு இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து இருபத்தொரு ரூபா ஐம்பத்திரெண்டு சதம் (ரூபா 1,84,52,021.52) கெண்ட தொகையையும், அல்லது விற்பனை செய்யப்பட்ட நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தையும்;

I. சொல்லப்பட்ட 1051 ஆம் இலக்க முறியினால் பிணைப் பொறுப்பளிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 1051 ஆம் இலக்க முறியின் விடயத்தில் வருமதியாகவுள்ளதுமான அறுபத்தைந்து இலட்சத்து பத்தாயிரம் ரூபா (ரூபா 65,10,000.00) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்குப் பன்னிரெண்டு தசம் இரண்டு ஐந்து சதவீத (12.25%) வட்டியையும் அத்துடன்.

II. சொல்லப்பட்ட 423 ஆம் இலக்க முறியினால் பிணைப் பொறுப்பளிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 423 ஆம் இலக்க முறியின் விடயத்தில் வருமதியாகவுள்ளதுமான ஒரு கோடி எட்டு இலட்சத்துப் பதினேழாயிரத்து நானூற்றிமூன்று ரூபா ஆறு சதம் (ரூபா 1,08,17,403.06) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்குப் பதின்மூன்று சதவீத (13%) வட்டியையும்.

எல்லாம் 2018, மே 1 ஆந் நாளிலிருந்து விற்பனைத் திகதிவரை, அதன்பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து, முதன்மைச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் நியதிகளின்படி அடையப்பட்ட விற்பனைச் செலவுகள், விற்பனைச் செலவுகள், மற்றும் ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றுடன் சேர்த்து அறவிடுவதற்காக, உத்தரவுபெற்ற ஏலதாரரான திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.".

### ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தின் சியன கோறளையின் அதிகாரி பத்துவில் பியகம பிரதேச சபை எல்லைகளினுள் ஹெய்யன்துடுவ கிழக்கு கிராம அலுவலர் பிரிவினுள்ளும் பியகம பிரதேச செயலகத்தினுள்ளும் ஹெய்யன்துடுவ கிராமத்தில் அமைந்துள்ளதும் "கொரக்காகஹாவத்த" எனவழைக்கப்படும் காணியினதாய் (உரிமம்பெற்ற நில அளவையாளர் டீ. சி. கொத்தலாவல என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1988.07.03 ஆந் திகதிய 112/88 ஆம் இலக்க வரைபடத்தின் ஒன்று சேர்க்கையாகவும் மீள் நில அளவையாகவுமுள்ளதும்) உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஏ. ரத்னம் என்பரினால் தயாரிக்கப்பட்ட 2004.06.16 ஆந்திகதிய 499/4 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் "B" எனவடையாளமிடப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் B பின்வரும் எல்லைகளையுடையது- வடகிழக்கில் 112/ 88 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 5 ; தென்கிழக்கில் : 112/88 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 3 மற்றும் சங்கமித்த வித்தியாலய வளவுகள் ; தென்மேற்கில் : கொட்டுண்ண வீதி மற்றும் ; வடமேற்கில் : காணித்துண்டம் A ; பரப்பளவில் இது, அதன்மீதுள்ள அத்துடன்/ அல்லது அதனோடு நிரந்தரமாக இணைக்கப்பட்ட அல்லது பொருத்தப்பட்ட கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் வேறு எல்லாவற்றுடனும் ஒரு றூட் இருபத்திமூன்று தசம் ஒன்பது ஏழு பேர்ச்சுக்களை (0ஏ. 1றா. 23.97பே.) கொண்டுள்ளதுடன் கம்பஹா காணிப்பதிவகத்தில் தொகுதி பக்கம் N229/ 61 இல் பதிவுசெய்யப்பட்டுமுள்ளது.

சபையின் கட்டளைப்படி,

சபைச் செயலாளர்,
தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ.

6-899

---

### சம்பத் வங்கி பீஎல்சீ
(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டின் 01 மற்றும் 19 ஆம் இலக்கங் களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

டப்லியூ ஜீ தில்ஹான் மற்றும் ரீ ஆர் தர்மரத்ன
கணக்கு இல. 1003 5442 0462

2018.04.26 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும், ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு - 2, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசுவான சீ. ஜீ. அபேவிக்ரம என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015, செத்தெம்பர் 11 ஆந் திகதியிடப்பட்ட இல. 2176 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடமைப்பட்டவர்கள் என்ற வகையில் இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் வீரப்புலிகே கனேஷ் தில்ஹான் மற்றும் தமீலா ரமணிலத்தா தர்மரத்ன என்பவர்களில் கடன்பட்டவர் எனும் வகையில் வீரப்புலிகே கனேஷ் தில்ஹான் என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இல. 2176 எனும் ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கை யில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் அறுபத்தி மூன்று இலட்சத்து இருபத்தி ஆறாயிரத்து நூற்றி எழுபத்தி மூன்று ரூபா இருபது சதம் (ரூபா 63,26,173.20) 2018, மாச்சு 26 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட அறுபத்தி மூன்று இலட்சத்து இருபத்தி ஆறாயிரத்து நூற்றி எழுபத்தி மூன்று ரூபா இருபது சதம் (ரூபா 63,26,173.20) 2018, மாச்சு 27 ஆந் திகதி முதல் இல. 2176 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஐம்பத்தி ஒன்பது இலட்சத்து எழுபத்தி ஏழாயிரத்து நாநூற்று பதினொரு ரூபா எழுபத்தி ஏழு சதம் (ரூபா 59,77,411.77) மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு ஒன்பது தசம் ஐந்து

*வீதம் (9.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள் ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 2176 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ டப்ளியூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.".*

### அட்டவணை

மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரலே பல்லே பத்துவின் மஹரகம பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மஹரகம நகர சபை எல்லைகளுக்குள் மாதிவெல இல் 524 ஐ ஏற்ற கிராம அலுவலர் பிரிவின் மாதிவெலையில் அமைந்த மாதிவெல வீதி, வரிமதிப்பீட்டு இல. 352/D4 ஏற்ற "நிந்தோரவெல்ல கும்புர, பரகாஹா கும்புர, பெல்அத்தெ கும்புர, தெல்காஹா கும்புர, அம்பகாஹா கும்புர புவக்வெட்டிய கும்புர, பெல்லன்காஹா கும்புர மற்றும் கெக்குனகாஹா கும்புர" (உத்தரவுபெற்ற நில அளவையாளர் எல். ஜீ. ஏ. ஷாந்த என்பவரால் தயாரிக்கப்பட்ட 2007, ஒற்றோபர் 17 ஆந் திகதியிடப்பட்ட இல. 2252 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 1 இல் தற்போது அமைந்துள்ள எல்லைகளின் அடிப்படையில் மீள் அளவீடும் உப பிரிவுமான) என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. எம். ஏ. எச். பண்டார என்பவரால் தயாரிக்கப்பட்ட 2009, ஒற்றோபர் 25 ஆந் திகதியிடப்பட்ட இல. 3466 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 60 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : லொட்கள் 50, 51 மற்றும் 53; கிழக்கிற்கு : லொட்கள் 53, 54 மற்றும் 59; தெற்கிற்கு : லொட்கள் 59 மற்றும் 61 மற்றும் ; மேற்கிற்கு : லொட்கள் 51 மற்றும் 50, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஏழு பேர்ச் (0ஏ. 0றூ. 7பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல 3466 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

இல. 3466 எனும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட லொட் இலக்கங்கள் 13, 26, 32 33 40 47 49 61 மற்றும் 63 என குறிக்கப்பட்ட அனைத்து வீதி ஒதுக்கங்களின் மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளும் அதன் கீழும் இவை உட்பட வேறு பொது உரிமைகளுடன் கூடியது.

கூறப்பட்ட வரைபட இல. 3466 இல் காட்டப்பட்ட லொட் 60 என குறிப்பிடப்பட்ட காணித் துண்டு, உத்திரவுபெற்ற நில அளவையாளர் எல். ஜீ. ஏ. ஷாந்த ஜீ பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2007, ஒற்றோபர் 17 ஆந் திகதியிடப்பட்ட இல. 2252 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 1 இல் தற்போது அமைந்துள்ள எல்லைகளின் அடிப்படையில் மீள் அளவீடும் உப பிரிவுமானதுடன் மற்றொரு விதத்தில் அரச நில அளவையாளரான எச். ஏ. டீ. எஸ். பிரேமசிரி என்பவரால் தயாரிக்கப்பட்ட 1999, ஒற்றோபர் 14 ஆந் திகதியிடப்பட்ட இல. Co. 8098 எனும் P வரைபடத்தில் காட்டப்பட்ட லொட்கள் 8, 9, 10 மற்றும் 11 உத்தரவுபெற்ற நில அளவையாளா எல். ஜீ. ஏ. ஷாந்த பிரிய பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2006.08.23 ஆந் திகதியிடப்பட்ட ஏற்பிசைவு செய்யப்பட்ட உத்தரவுபெற்ற நில அளவையாளர் எல். ஜீ. ஏ. ஷ ாந்த பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2000.11.08 ஆந் திகதியிடப்பட்ட இல. 1366 எனும் வரைபடத்தில் லொட் 1 இன் மீள் அளவீடும் உப பிரிவும் மற்றும் ஒன்றிணைத்தலுமானதுடன் (நில அளவை ஆணையாளருக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளரான (காணி மற்றும் சொத்துக்கள்) ஜீ. வடுகெதர என்பவரால் தயாரிக்கப்பட்ட 1981, ஓகத்து 20 ஆந் திகதியிடப்பட்ட இல. Co. 5530 எனும் P வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 1 முதல் 28 வரை) அவை கீழே குறிப்பிடப்பட்டவாறாகும்.

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரலே பல்லே பத்துவின் மஹரகம பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மஹரகம நகர சபை எல்லைகளுக்குள் மாதிவெல இல. 524 ஐ ஏற்ற கிராம அலுவலர் பிரிவின் மாதிவெலையில் அமைந்த "நிந்தோரவெல்ல கும்புர, பரகாஹா கும்புர, பெல்அத்தெ கும்புர, தெல்காஹா கும்புர, அம்பகாஹா கும்புர, புவக்வெட்டிய கும்புர, பெல்லன்காஹா கும்புர மற்றும் கெக்குனகாஹா கும்புர" உத்தரவுபெற்ற நில அளவையாளர் எல் ஜீ ஏ ஷாந்த பிரிய பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2006.08.23 ஆந் திகதியிடப்பட்ட endorsement மற்றும் 2000.11.08 ஆந் திகதியிடப்பட்ட இல. 1366 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 01 (நில அளவை ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட 1981.08.20 ஆந் திகதியிடப்பட்ட இல. Co. 5530 எனும் P வரைபடத்தில் காட்டப்பட்ட லொட்கள் 1, 2, 3, 4 மற்றும் 6 எனும் காணித் துண்டுகளின் ஒன்றிணைப்புமாகும் என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : மாதிவெல வீதி, ஒபவத்த வீதி மற்றும் இல. P.P.Co. 8098 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட்கள் 8, 9, 10 மற்றும் 11 மற்றும் இவ் வரைபடத்தின் லொட் 2; கிழக்கிற்கு : ஒபவத்த வீதி; தெற்கிற்கு: ஆறு மற்றும் இவ் வரைபடத்தின் லொட் 2; மற்றும் ; மேற்கிற்கு : மாதிவெல வீதி, இல P.P.Co. 8098 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட்கள் 8, 9, 10 மற்றும் 11, அவ் வரைபடத்தின் லொட் 2 மற்றும் ஆறு, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் நான்கு ஏக்கர்கள் மூன்று றூட்கள் மற்றும் இருபத்தி ஐந்து தசம் மூன்று பேர்ச். (4ஏ. 3றூ. 25.3பே.) அல்லது (1.9864 ஹெக்டேயர்கள்) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1366 எனும் வரைபடத்திற்கு அமைவாக கல்கிஸ்ஸை (தற்போது தெல்கந்தை - நுகேகொடை) காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் M 3040/06 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரலே பல்லெ பத்துவின் மஹரகம பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மஹரகம நகர சபை எல்லைகளுக்குள் மாதிவெல இல. 524 ஐ ஏற்ற கிராம அலுவலர் பிரிவின் மாதிவெலையில் அமைந்த "அம்பகாஹாவத்த" நில அளவை அணையாளருக்காக நில அளவை சுபிரிண்டெண்டன் எல் எல் எஸ் ரோஹினி குணசேக்கர என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அரச நில அளவையாளரான எச். ஏ. டீ. எஸ் பிரேமசிரி என்பவரால் தயாரிக்கப்பட்ட 1999 ஒற்றோபர் 14 ஆந் திகதியிடப்பட்ட இல. Co. 8098 எனும் P வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 8 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு: மாதிவெல வீதி மற்றும் ஒபவத்த வீதி; கிழக்கிற்கு : லொட் 3 ; தெற்கிற்கு : லொட் 9 ; மற்றும் ; மேற்கிற்கு : லொட் 9 மற்றும் மாதிவெல வீதி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் சைபர் தசம் சைபர் சைபர் எட்டு சைபர் ஹெக்டேயர்கள் (0.0080 Hec) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. Co. 8098 எனும் வரைபடத்திற்கு அமைவாக கல்கிஸ்ஸை (தற்போது தெல்கந்தை - நுகேகொடை) காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் M 3034/202 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. கூறப்பட்ட மாதிவெலையில் அமைந்த "அம்பகாஹா வத்த" நில அளவை அணையாளருக்காக நில அளவை சுபிரிண்டெண்டன் எல் எல் எஸ் ரோஹினி குணசேக்கர என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அரச நில அளவையாளரான எச். ஏ. டீ. எஸ். பிரேமசிரி என்பவரால் தயாரிக்கப்பட்ட 1999, ஒற்றோபர் 14 ஆந் திகதியிடப்பட்ட இல. Co. 8098 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 9 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு: மாதிவெல வீதி, லொட் 8 மற்றும் ஒபவத்த வீதி; கிழக்கிற்கு: Co. 5530 P வரைபடத்தில் லொட் 1 தெற்கிற்கு : Co. 5530 P வரைபடத்தில் லொட் 1 மற்றும் லொட் 10 மற்றும்; மேற்கிற்கு : லொட் 10 மற்றும் மாதிவெல வீதி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் சைபர் தசம் சைபர் சைபர் ஒன்பது சைபர் ஹெக்டேயர்கள் (0.0090 Hec) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல Co. 8098 எனும் P எனும் வரைபடத்திற்கு அமைவாக கல்கிஸ்ஸை (தற்போது தெல்கந்தை - நுகேகொடை) காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் M 3034/ 203 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

4. கூறப்பட்ட மாதிவெலையில் அமைந்த "அம்பகாஹா வத்த" நில அளவை அணையாளருக்காக நில அளவை சுபிரிண்டெண்டன் எல். எல். எஸ். ரோஹினி குணசேக்கர என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அரச நில அளவையாளரான எச். ஏ. டீ. எஸ். பிரேமசிரி என்பவரால் தயாரிக்கப்பட்ட 1999, ஒற்றோபர் 14 ஆந் திகதியிடப்பட்ட இல. Co. 8098P எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 10 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு: மாதிவெல வீதி, லொட் 9 மற்றும் Co. 5530 P வரைபடத்தில் லொட் 1; கிழக்கிற்கு Co. 5530 P வரைபடத்தில் லொட்1; தெற்கிற்கு : Co. 5530 P வரைபடத்தில் லொட் 1 மற்றும் 2 மற்றும் லொட் 11 மற்றும் ; மேற்கிற்கு : லொட் 11 மற்றும் மாதிவெல வீதி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் சைபர் தசம் சைபர் மூன்று ஆறு சைபர் ஹெக்டேயர்கள் (0.0360 Hec) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல Co. 8098 எனும் P அமைவாக கல்கிஸ்ஸை (தற்போது தெல்கந்தை - நுகேகொடை) காணிப் பதிவகத்தில் பரிமாணம் /பக்கம் M 3034/204 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

5 நில அளவை அணையாளருக்காக நில அளவை சுபிசிண்டெண்டன் எல். எல். எஸ். ரோஹினி குணசேக்கர என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அரச நில அளவையாளரான எச். ஏ. டீ. எஸ். பிரேமசிரி என்பவரால் தயாரிக்கப்பட்ட 1999, ஒற்றோபர் 14 ஆந் திகதியிடப்பட்ட இல. Co. 8098 P வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 11 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு: மாதிவெல வீதி மற்றும் 2 ; லொட் 10; கிழக்கிற்கு: லொட் 10 மற்றும் Co 5530 P வரைபடத்தில் லொட் 1 மற்றும் தெற்கிற்கு: Co 5530 P வரைபடத்தில் லொட் 2 மற்றும் 3 ; மேற்கிற்கு: மாதிவெல வீதி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் சைபர் தசம் மேற்கிற்கு மாதிவெல வீதி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் சைபர் தசம் சைபர் மூன்று ஒன்பது சைபர் ஹெக்டேயர்கள் (0.0390 Hec) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம் மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. Co. 8098 எனும் P வரைபடத்திற்கு அமைவாக கல்கிஸ்ஸை (தற்போது தெல்கந்தை- நுகேகொடை) காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் M 3034/ 205 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரலே பல்லெ பத்துவின் நுகேகொடை பிரதேச செயலாளர் அலுவலக பிரிவின் மாதிவெல மற்றும் உடஹாமுள்ளையில் அமைந்த நிந்தோரவெல்ல கும்புர, பரகாஹா கும்புர, பெல்அத்தெ கும்புர, தெல்காஹா கும்புர, அம்பகஹா கும்புர புவக்வெட்டிய கும்புர, பெல்லன்காஹா கும்புர எனும் கெக்குனகாஹா கும்புர, கொடபரகாஹா கும்புர, கொடபரகாஹா கும்புர, எனும் கெட்டதெனியே கும்புர, ஹால்பத் கும்புர, கும்புக்காஹா கும்புர எனும் பெலன்காஹா கும்புர மில்லகாஹா கும்புர, குபுக்காஹா கும்புர, கும்புக்காஹா கும்புர எனும் கொனாகந்த கும்புர என்றழைக்கப்படும் காணிக்கு நில அளவை அணையாளருக்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளரான (காணி மற்றும் சொத்துக்கள்) ஜீ வடுகெதர என்பவரால் தயாரிக்கப்பட்ட 1981, ஓகத்து 20 ஆந் திகதியிடப்பட்ட 1 முதல் 28 வரை குறிப்பிடப்பட்ட காணித் துண்டுகளின் எல்லைகளாவன - வடக்கிற்கு : ஹைவே கிழக்கிற்கு : பிட்ட எல வீதி பிட்ட எல வீதி பிட்ட எல வீதி, பிட்ட எல, அனுர மாவத்தை பிட்ட எல. ஈ. டீ. ஜீனதாச விஜேசூரிய மற்றும் ஈ டீ ஜீனதாச என்பவர்கள் உரிமம் கோரும் தெல்காஹாவத்த என்றழைக்கப்படும் காணி, வீதி, எஸ், ஜயசிங்ஹ, என் ஜே விஜேசிங்ஹ, ஈ எச். சோமவத்தி கே ஜேன் நோனா மற்றும் ஏ ஏ டீ மார்ட்டின் என்பவர்கள் உரிமம் கோரும் தெல்காஹாவத்த என்றழைக்கப்படும் காணி; தெற்கிற்கு : இல. Co. 1801 P வரைபடத்தில் லொட் 1 பிட்ட எல. ஜீ. ஜீ. சேனாரத்ன என்பவர் உரிமம் கோரும் தெல்காஹாவத்த என்றழைக்கப்படும் காணி எஸ். ஜயவர்தன என்பவர்கள் உரிமம் கோரும் கொன்னகந்த என்றழைக்கப்படும் காணி மற்றும் மேற்கிற்கு: எஸ் ஜயவர்தன ரீ. ஜீ. ஆரியதாச, டப்ளியூ பொத்தேஜீ மற்றும் சிரில் சேனாரத்ன என்பவர்கள் உரிமம் கோரும் கொன்னகந்த என்றழைக்கப்படும் காணி, வீதி, ஈ. டீ. பௌலிஸ் என்பவர் உரிமம் கோரும் குபுக்காஹா ஓவிட்ட என்றழைக்கப்படும் காணி, எஸ். டீ. எமலின் நோனா, எஸ். டீ. சிரில், ரீ. சந்ரபால, எஸ். டேவிட் மற்றும் எச். ஆல்பட் என்பவர்கள் உரிமம் கோரும் கொடபரகாஹாவத்த என்றழைக்கப்படும் காணி, எஸ். டீ. செனெஹெவத்தி என்பவர் உரிமம் கோரும் களபடகாஹாவத்த என்றழைக்கப்படும் காணி, எஸ். டீ. சரணபால மற்றும் பியதாச சில்வா என்பவர்கள் உரிமம் கோரும் கொன்னகாஹாவத்த என்றழைக்கப்படும் காணி எஸ். டீ. சரணபால மற்றும் ஜீ. வின்சன்ட் டி சில்வா என்பவர்கள் உரிமம் கோரும் கொன்னகாஹாவத்த என்றழைக்கப்படும் காணி பீ. டீ. குரே ஜீ. எச். குனபால ஜீ. எச். எட்வர்ட் மற்றும் லீலாவத்தி அத்துகோரல என்பவர்கள் உரிமம் கோரும் லாவுலுகாஹாவத்த என்றழைக்கப்படும் காணி, மாதிவெல வீதி ஜே. மார்ட்டின் பெரேரா ஈ. டீ. கருணாசேன ஜீ. என். ஜயவத்தி மற்றும் என். நிவ்ட்டன் பீரிஸ் என்பவர்கள் உரிமம் கோரும் வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 290, 292, 294 மற்றும் 296 ஐ ஏற்ற வளவுகள், எஸ். கே. விஜேரத்ன மற்றும் ஜே. ஹேரத் பெரேரா என்பவர்கள் உரிமம் கோரும் லாவுலுகாஹாவத்த என்றழைக்கப்படும் காணி மாதிவெல வீதி மற்றும் அசைல் விஜேசிங்ஹ டப்லியூ. ஜீ. பெரேரா டப்லியூ. டீ. ஆல்பட் ஜீ. கே. மல்லிக்கா பெரேரா டீ. டீ. பியதாச என்பவர்கள் உரிமம் கோரும் லாவுலுகாஹாவத்த என்றழைக்கப்படும் காணி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பத்தி ஏழு ஏக்கர்கள் ஒரு றூட் மற்றும் முப்பத்தி மூன்று பேர்ச் (37ஏ. 1றூ. 33பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கல்கிஸ்ஸை (தற்போது தெல்கந்தை - நுகேகொடை) காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் M 1578/ 70 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

6-894/1

---

# பகுதி I : தொகுதி (I) - பொது

**குறிப்பு**.- மேற்படி தலைப்பின் கீழான மேலதிக அறிவித்தல்களை தயவுசெய்து 2018.06.22 ஆந் திகதி பிரசுரமாகும் அரசாங்க வர்த்தமானியில் பார்க்கவும்.

வரையறுக்கப்பட்ட இலங்கை ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பனியினால் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.
www.documents.gov.lk